அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பேயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

## நக்கல்நமசிவாயம்




மலர் : 01, இதழ் : 46 சார்வரி வருடம், ஆவணி மாதம் 08ஆம் திகதி திங்கட்கிழமை (24.08.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை-04, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

### - பிரதிப் பிரதமர் பதவி -

# மைத்ரியின் கோரிக்கை நிராகரிப்பு!

## சுதந்திரக்கட்சி ஆதரவில்லாவிடின் மாற்றுக் கட்சிகளின் உதவியுடன் அரசியலமைப்புத் திருத்தம்



- நமது விசேட செய்தியாளர் -


அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின்போது பிரதிப் பிரதமர் பதவி ஒன்றை முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு வழங்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விடுத்த கோரிக்கை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வாய்ப்பில்லையென உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்தில் 15 உறுப்பினர்களை கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு இரண்டு அமைச்சுப் பொறுப்புகளும், நான்கு இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளும், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி என்பன வழங்கப்பட்டுள்ள நிலையில், பிரதிப் பிரதமர் பதவி வழங்கப்படும் சாத்தியமில்லையென அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன.

இதற்கிடையில், முன்னாள் ஜனாதிபதிக்கு பிரதிப் பிரதமர் பதவியை வழங்காமல் நிராகரிக்கும் பட்சத்தில் அரசியலமைப்பு திருத்தத்திற்கு தேவையான நாடாளுமன்ற பெரும்பான்மைக்கு ஆதரவை வழங்காமல் சுதந்திரக் கட்சி பின்னடிக்குமாயின் வேறு கட்சிகளின் ஆதரவைப்பெற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற முயலுமென மேற்படி அரசியல் வட்டாரங்களில் மேலும் அறியமுடிந்தது.

## வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல முயற்சித்த பாதாள உறுப்பினர்கள் நால்வர் கைது!




பொலிஸாரின் கண்ணில் மண்ணைத்தூவி, வெளிநாட்டுக்கு தப்பித்துச்செல்ல முயற்சித்த பாதாள உறுப்பினர்கள் நால்வர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சேதவத்த, வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த ரணசிங்க ஆராச்சிகே இஷார லக்மால், மோதரையைச் சேர்ந்த கமகே சாரங்க பிரதீப் நொஹொத் வெல்லே சாராங்க, கொட்டுவில, வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த கதலுவ லியனகே புத்திக சஞ்சீவ, வென்னவத்த, வெல்லம்பிட்டிய தாப்தீன் மொஹமட் சுபீர் ஆகியோரே இவ்வாறு கைது... 02

## 19 ஆவது அரசியலமைப்புத் திருத்த நீக்கம்-அனைவரின் கருத்தறியக்கேட்கிறார் கரு



அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை ரத்து செய்து, புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதென்றால், அது தொடர்பில் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், புத்திஜீவிகள் மற்றும் பொது மக்கள் ஆகிய அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய அரசியலமைப்பு சட்டமூலம் அனைத்து தரப்பின்.... 02

## எம்.பி.க்களிடம் உறுதிமொழி கடிதம் வாங்கினார் ஹக்கீம்

### ஆளுங்கட்சிப் பக்கம் செல்லாதிருக்க கிடுக்கிப்பிடி!



கட்சியின் கொள்கைகளுக்கும், தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவார்களென உறுதிமொழியளிக்கும் ஆவணமொன்றில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டுள்ளார்களென அறியமுடிகின்றது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதமரை அண்மையில் சந்தித்த சூழ்நிலையில், அக்கட்சியின் இருவர் ஆளுங்கட்சியுடன் இணைந்து அமைச்சுக்களை பெறலாம் என்ற செய்திகள் வெளிவந்திருக்கும் பின்னணியில் இந்த நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்னதாக இவ்வாறு கையொப்பம் பெறப்பட்டுள்ள அதேசமயம், கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமும் அந்த ஆவணத்தில் கையொப்பம்.... 02

*விநாயகர் சதுர்த்தி திருநாளை முன்னிட்டு நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி இறுதி நாளான நேற்றைய தினம் காக்கைதீவு கடலில் விநாயகர் சிலை கரைக்கப்படுவதை படத்தில் காணலாம்.*



படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன

## பிரபாகரனின் பெரியப்பாவாக மாற விக்னேஸ்வரன் முயல்கிறார்

### எஸ்.பி. கொதிப்பு!



பிரபாகரனின் பெரிய தந்தையாவதற்கே சி.வி.விக்னேஸ்வரன் முயற்சிக்கின்றார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இலங்கையின் பூர்வீக மொழி சிங்களம் அல்ல தமிழ் என விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். அவரின் இந்த உரையாடலால் நாம் குழப்பம் அடையவில்லை. 02

## சுயநிர்ணயம் குறித்துப்பேசி சிங்கள இனத்தை தரமிறக்கினார் விக்கி

### சரத் வீரசேகர சாடல்!



இலங்கை நாடானது தமிழர் பூமி எனவும், இந்த மண்ணின் பூர்வீக குடிகள் தமிழர்கள் எனவும், தமிழ் மொழி இந்த நாட்டின் பிரதான மொழி எனவும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஷ்வரன் தெரிவித்த கருத்திற்கு தான் கடும் எதிர்ப்பை வெளியிடுவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். 02


## பாதுகாப்பமைச்சு யாரின் கீழ் வருகிறது?

### வர்த்தமானியில் விபரங்கள் இல்லை!

புதிய அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், புதிய அமைச்சரவை தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பாதுகாப்பு அமைச்சு தொடர்பில் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

ஓகஸ்ட் 13ஆம் திகதி 2188/42 இலக்கத்திலான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவினால், புதிய அமைச்சரவை தொடர்பிலான விபரங்கள் வெளியிடப்பட்டன. 02

## கொரோனா உயிரிழப்பு 12ஐ எட்டியது!




கொரோனா வைரஸ் தொற்றினால் 12வது மரணம் நிகழ்ந்துள்ளது.


தேசிய தொற்றுநோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 47 வயதான பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று (23) அதிகாலை அவர் உயிரிழந்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவத்தகம, வேஉட பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 02

## நோய்வாய்ப்பட்ட இளைஞனை விசேட விமானம் மூலம் இலங்கை அனுப்பிய சவூதி தொழில் நிறுவனம்

### மருத்துவர் குழுவுடன் கட்டுநாயக்கவில் தரையிறங்கிய ஜெட்

சவூதி அரேபியாவிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிந்தபோது, மூளையில் இரத்த உறைவு ஏற்பட்ட நிலையில், சுமார் 2 மாத காலம் சுயநினைவை இழந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இலங்கையரை விசேட விமானத்தில் கொழும்புக்கு அனுப்பி வைக்க அந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த அன்ரூ ரொஹான் என்ற நபரே பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவரை குறித்த நிறுவனம் விசேட தனியார் ஜெட்.... 02

| | | | | |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 1011 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 15ஆம் திகதி | ஆங்கில எழுத்து J | 33 48 52 53 |
| சுப்பர் போல் | 1192 ஆவது வாரம் | 2020 ஒகஸ்ட் 15ஆம் திகதி | ஆங்கில எழுத்து L | 22 32 67 77 |
| கோட்டிபதி கப்ருக | 612 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி | ஆங்கில எழுத்து X | 27 31 53 75 |
| சுப்பர் போல் | 1193 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி | ஆங்கில எழுத்து B | 40 55 73 74 |
| அத கோட்டிபதி | 1012 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 16ஆம் திகதி | ஆங்கில எழுத்து R | 02 29 39 43 |
| சனிதா வாசனா | 3352 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி | ஆங்கில எழுத்து V | 11 23 33 51 |
| சுப்பர் போல் | 1194 ஆவது வாரம் | 2020 ஒகஸ்ட் 17ஆம் திகதி | ஆங்கில எழுத்து A | 27 44 57 74 |
| அத கோட்டிபதி | 1013 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 17ஆம் திகதி | ஆங்கில எழுத்து K | 12 36 71 74 |
| கோட்டிபதி கப்ருக | 613 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி | ஆங்கில எழுத்து A | 09 12 14 43 |
| அத கோட்டிபதி | 1014 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 18ஆம் திகதி | ஆங்கில எழுத்து S | 24 40 47 59 |
| சனிதா வாசனா | 3353ஆவது வாரம் | 2020 ஒகஸ்ட் 19ஆம் திகதி | ஆங்கில எழுத்து T | 38 58 61 62 |
| அத கோட்டிபதி | 1015 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 19ஆம் திகதி | ஆங்கில எழுத்து E | 04 09 12 75 |
| சுப்பர் போல் | 1195 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | ஆங்கில எழுத்து L | 30 36 39 77 |
| அத கோட்டிபதி | 1016 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 20ஆம் திகதி | ஆங்கில எழுத்து A | 18 19 21 62 |

# செப்டெம்பர் இறுதியில் விமானநிலையங்கள் மீண்டும் திறக்கப்படலாம்

## அரசாங்கம் நம்பிக்கை

கட்டுநாயக்க விமான நிலையத்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தின் இறுதியில் மீண்டும் திறக்கமுடியுமென்ற நம்பிக்கையுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். இதுதொடர்பில், ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அதிகாரிகளிடமிருந்து ஒப்புதல் பெற்ற பின்னரே இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சுற்றுலாப் பயணிகளை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். கொரோனா வைரஸ் நோய்த்தொற்று காரணமாகவே கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கையிலுள்ள சகல விமான நிலையங்களும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

எனினும், சுற்றுலாப் பயணங்களுக்காக இலங்கைக்கு வந்த பயணிகள், கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக தாய்நாட்டுக்கு திரும்பிச் செல்ல முடியாதவர்களை அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்பிவைக்கவும் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கும் அரசாங்கம் சிறப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது என்றார்.

# தமிழ் முற்போக்கு கூட்டணி இருவர் பயணிக்கும் சைக்கிளல்ல அறுவர் பயணிக்கும் ஜீப் வண்டி

## - மனோ கணேசன் தெரிவிப்பு





மாகாணசபைத் தேர்தலில் 10 மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி வெற்றி நடைபோடும் என்று கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்றவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நேற்று மதியம் ஹட்டன் நகரில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழ் முற்போக்கு கூட்டணி என்பது இருவர் பயணிக்கும் சைக்கிள் கிடையாது. அறுவர் பயணிக்கும் ஜீப் வண்டியாகும். இலங்கை நாடாளுமன்றத்திலேயே நான்காவது பெரிய கட்சி தமிழ் முற்போக்கு கூட்டணியாகும். நாடு முழுவதும் 7 மாவட்டங்களில் 3 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேல் வாக்குகளைப்பெற்றுள்ளது.

அதேபோல் நுவரெலியா மாவட்டத்திலும் எமது கூட்டணிக்கே வெற்றி கிடைத்துள்ளது. மூவர் நாடாளுமன்றம் தெரிவாகியுள்ளனர். வெற்றிபெற்றுவிட்டோம் என கூறியவர்களுக்கு இரண்டு எம்.பிக்களே இருக்கின்றனர். எனவே, ஆளும் வளரனும், அறிவும் வளரனும், அதுதான்டா வளர்ச்சி என்பதை சின்ன தம்பிக்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி என்பது சுயேட்சைக்குழுவோ அல்லது மாவட்டக் கட்சியோ கிடையாது. தேசிய கட்சியாகும். சுமார் 10 மாவட்டங்களில் எமது கொடி பறக்கின்றது. வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் தமிழ் பேசும் மக்களின் தேசிய இயக்கமாகவும் முற்போக்கு கூட்டணி விளங்குகின்றது.

இது ஆரம்பம் மட்டுமே. அடுத்து மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் 10 இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் வெற்றிபெறுவோம் என்பது உறுதி. நாம் எதிர்க்கட்சியாக இருந்தாலும் எதிரி கட்சி அல்ல. எனவே, அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை ஆதரிப்போம் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றேன்.

நுவரெலியா மாவட்டம் என்பது மலையகத்தின் இதயம். அந்த மாவட்டத்தில் இருந்து மூவர் வெற்றிபெற்றுள்ளனர். அதேபோல் கம்பஹா, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலும் எமக்கு கணிசமானளவு வாக்குகள் கிடைத்துள்ளன. கண்டி, பதுளை, கொழும்பிலும் வெற்றிபெற்றுள்ளோம்." - என்றார்.





பொரளை அஹதிய்யா மற்றும் இஸ்லாமிய கல்வி நிலையத்தினத்தின் 33வது வருடாந்த ஹிஜ்ரி 1442 முஹர்ரம் நிகழ்வு அஹதிய்யா பாடசாலை அதிபர் ஷிப்லி ஹாசிமின் ஏற்பாட்டில் தலாபிட்டிய அஹதிய்யாவின் தலைவர் உவைன் உவைஸ் தலைமையில் நேற்று (23) தெமட்டகொட வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியால கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக சங்கைக்குரிய கிரிஇப்பேவே விஜித தேரரும் கௌரவ அதிதியாக பிரதமரின் ஆலோசகர் ஏ.எஸ்.எம்.நஸீம் ஹாஜியார் மற்றும் இப்திகார் அசீஸ் உள்ளிட்ட பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (படங்கள் - ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# வலையில் சிக்கிய சிறுத்தை உயிரிழந்த நிலையில் மீட்பு



கம்பளை, தொலுவ பிரதேசத்தில் அம்பகஸ்தென்ன பகுதியில் வலையில் சிக்கி சிறுத்தையொன்று உயிரிழந்த நிலையில் நேற்று அதன் சடலம் மீட்கப்பட்டது.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக தனியாருக்கு சொந்தமான தோட்டத்தில் வைக்கப்பட்ட வலையில் சிக்கியே இந்த சிறுத்தை உயிரிழந்துள்ளது. சுமார் 4 வயதான சிறுத்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவந்துள்ளது. வன விலங்குகளை வேட்டையாட வலைகளை அமைப்பது சட்டவிரோதமானது என்பதால், வலைகளை வைத்த நபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வான்-தரைப்படைகளின் உதவியுடன் 8 கஞ்சா தோட்டங்கள் முற்றுகை!



(பலாங்கொடை)

இலங்கையில் முதற் தடவையாக கஞ்சா தோட்டங்களை தேடி முற்றுகையிடும் பணியில் வான், தரைப்படைகள் பயன்படுத்தப்பட்டு, பாரிய நிலப்பரப்பில் 8 கஞ்சா தோட்டங்களில் பயிர் செய்யப்பட்டிருந்த 1 இலட்சத்து 59 ஆயிரத்து 530 கஞ்சா செடிகள் நேற்று (23) வெற்றிகரமாக முற்றுகையிடப்பட்டன.

பலாங்கொடை தனமல்வில வீதியின் ஹம்பகமுவ குடாஓய தனமல்வில வரையிலான பெரும் வனப்பகுதியில் 3 ஹெலிகொப்டர்கள் மூலமாக வான் படையால் அவதானிக்கப்பட்டு 8 விசேட அதிரடிப்படை இராணுவ மற்றும் பொலிஸ் படையணிகள் கூட்டாக தரைவழியாக முன்னேற இந்த மாபெரும் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இத்தேடுதல்களின் போது 3 சந்தேக நபர்கள் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டதுடன் கஞ்சா செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் மீட்கப்பட்டன.

## பிரபாகரனின்....

ஏனெனில் விக்னேஸ்வரனின் பிள்ளைகளுக்கே தமிழ் மொழி தெரியாது.

குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறு இனவாத கோணத்தில் கருத்துகளை வெளியிட்டுவருகிறார்." என்றார் எஸ்.பி திசாநாயக்க.

## எம்.பி.க்களிடம்....

இட்டுள்ளதாக தெரியவந்தது.

இதன்படி, கட்சிக் கொள்கைகளை எதிர்காலத்தில் மீறிசெயற்படுவோர் இந்த உடன்பாட்டையும் மீறியவர்களாகவே கருதப்படுவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## வெளிநாட்டுக்கு...

செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இஷார லக்மால் என்பவர் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கேரள கஞ்சாவை இறக்குமதிசெய்வதில் பிரசித்தமானவராவார். வெல்லே சாரங்க என்பவர் பாதாள உறுப்பினர் என்பதோடு, கேரள கஞ்சா இறக்குமதிசெய்யும் வியாபாரிகளில் முக்கியமானவராக இருந்து வந்துள்ளார். மேலும், புத்திக சஞ்சீவ என்பவர் பாதாள உலகத்தலைவர் என்று கருதப்படும் அங்கொட லொக்காவின் உதவியாளர் என்பதோடு இவரிடமிருந்து 29 இலட்சம் ரூபாவுக்கு அதிகமான பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர் மீதான வழக்கொன்று இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மொஹமட் சுபீர் என்பவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் என்பதோடு ஹங்வெல்ல, மக்கள் வங்கியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சுயநிர்ணயம்....

சி.வி.விக்னேஷ்வரன் இனவாத கருத்தொன்றையே வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற சிறப்புரிமைகளை பாதுகாக்கும் நோக்குடனேயே தான் அந்த சந்தர்ப்பத்தில் எந்தவித கருத்தையும் வெளியிடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கருத்து தொடர்பில் சபாநாயகருக்கு அறிவித்து, அதனை ஹன்சார்ட் பதிவிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார். அதேபோன்று, விக்னேஷ்வரன், கஜேந்திரகுமார் ஆகியோர் நாடாளுமன்றத்திற்கு வருகை தருவதற்கு முன்னர் முள்ளிவாய்க்கால் சென்றிருந்ததாக கூறிய அவர், அங்கு அவர்கள் இனவாதம் மற்றும் பிரிவினைவாதம் ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விக்னேஷ்வரனின் கருத்தானது இனவாத கருத்து என்பதுடன், சுய நிர்ணயம் தொடர்பில் கருத்துரைத்து சிங்கள இனத்தை குறைத்து பேசியுள்ளதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிக்கின்றார்.

## 19ஆவது...

பங்குப்பற்றுதலுடன் தயாரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனநாயகம், சட்டவாதிக்கம் ஆகியவற்றை பாதுகாப்பதற்கான பாரிய பொறுப்பை 19ஆவது திருத்தம் செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதனால் ஜனநாயகம் மற்றும் சட்டவாதிக்கம் ஆகியவற்றை பாதுகாக்கும் எந்தவொரு சரத்தும் இல்லாமல் செய்யப்படக்கூடாது என முன்னாள் சபாநாயகர் கோரியுள்ளார். 19ஆவது திருத்தத்திலுள்ள ஜனநாயக பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அதிலுள்ள தொழில்நுட்ப சர்ச்சைகளை மாத்திரம் ஆராய்ந்து அவற்றை மாத்திரம் அதிலிருந்து ரத்து செய்ய வேண்டும் எனவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். உலகின் தலைசிறந்த நாடாக இலங்கை இருக்க வேண்டும் என்றால், ஜனநாயகம் மற்றும் சட்டவாதிக்கம் ஆகியவற்றிற்கான கௌரவம் வழங்கப்பட வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

## நோய்வாய்ப்பட்ட...

விமானத்தின் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தமை விசேட அம்சமாகும்.

கடவத்தை பகுதியைச் சேர்ந்த அவர், சவுதி அரேபியாவிலுள்ள கல்ப் வெஸ்ட் என்ற நிறுவனத்தில் கடமையாற்றி வந்துள்ளார்.

அன்று ரொஹான் திடீரென சுகயீனமடைந்திருந்ததுடன், அவரை நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு அவரது குடும்பத்தினர் குறித்த நிறுவனத்திடம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கமைய, குறித்த தனியார் நிறுவனம் சுமார் 15 மில்லியன் ரூபாவை செலவிட்டு, தனியார் விசேட ஜெட் விமானமொன்றின் மூலம் நாட்டிற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தது.

ரொஹானை அழைத்து வந்த விமானத்தில் விசேட வைத்திய குழாம் மற்றும் தாதியர்களும் இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, அன்று ரொஹானை இலங்கைக்கு அழைத்து வந்த விசேட ஜெட் விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டதுடன், குறித்த நோயாளர் தனிமைப்படுத்தலுக்காக தனியார் வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதேவேளை, குறித்த நபருக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருவதாகவும், சிகிச்சைகளின் பின்னர் அவர் குணமடையும் சாத்தியம் உள்ளதாகவும் வைத்தியர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

அன்று ரொஹானை நாட்டிற்கு அழைத்து வர உதவி வழங்கிய கல்ப் வெஸ்ட் நிறுவனத்தின் உரிமையாளருக்கும் அவரது குழுவினருக்கும், அன்று ரொஹானின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

## பாதுகாப்பமைச்சு...

கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் கடந்த 12ஆம் திகதி புதிய அமைச்சரவைக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது, பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே செயற்படுவார் என அறிவிக்கப்பட்டதுடன், அந்த விடயம் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளங்களிலும் வெளியாகியிருந்தது.

இதன்படி, ஒகஸ்ட் 20ஆம் திகதியாகும் போதும், பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி செயற்படுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக செயற்படுகின்றமையானது, அரசியலமைப்பை மீறும் செயற்பாடு என தொடர்ச்சியாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

அதனாலேயே, பாதுகாப்பு அமைச்சர் பதவி தொடர்பில் ஜனாதிபதி உத்தியோகபூர்வ அறிவிப்பை இதுவரை வெளியிடவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பிரகாரம், நாடாளுமன்றத்திற்கு தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகளுக்கு மாத்திரமே அமைச்சு பொறுப்புக்களை ஏற்க முடியும்.

எனினும், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது, அவர் அமைச்சு பொறுப்புக்களை வைத்திருந்தார்.

19ஆவது திருத்தத்தின் மூலம் மைத்திரிபால சிறிசேனவின் முதல் பதவி காலத்திற்கு மாத்திரம் அமைச்சு பொறுப்புக்களை வகிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவாகிய சந்தர்ப்பத்தில் கூட பாதுகாப்பு அமைச்சராக எவரது பெயரும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதனால் உத்தியோகப்பற்றற்ற முறையில், பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி செயற்பட்டு வருகின்றமை தற்போது தெரியவந்துள்ளது.

## கொரோனா...

குறித்த பெண் இரணவில சிகிச்சை மத்திய வந்த நிலையில் நேற்றுமுன்தினம் (22) இரவு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதன்போதே அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பெண் புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர் எனவும் இருதய நோய் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் இதுவரை 2947 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 2798 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# அமீரக - இஸ்ரேல் ஒப்பந்தம்: பலஸ்தீனம் என்னவாகும்?

இஸ்ரேலுக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையில் சமீபத்தில் ஏற்பட்ட அமைதி ஒப்பந்தமானது கடந்த சில ஆண்டுகளாகத் துளிர்விட்டு வந்த அரபு - இஸ்ரேலிய நட்புறவுக்கு முறையான அங்கீகாரத்தைக் கொடுத்திருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பால் அறிவிக்கப்பட்ட ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய அரபு அமீரகமானது இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரித்து, அதனுடன் முறையான நட்புறவை உருவாக்கிக்கொள்ளும். தன் பங்குக்கு இஸ்ரேல் பலஸ்தீனத்தின் மேற்குக் கரையின் பகுதிகளைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் திட்டத்தை நிறுத்திவைக்கும்.

இஸ்ரேலை அங்கீகரிக்கும் மூன்றாவது அரபு நாடு முதல் வளைகுடா நாடு ஐக்கிய அரபு அமீரகம்தான் என்பதைப் பார்க்கும்போது, இது ஒரு மைல்கல் ஒப்பந்தம் எனலாம். ஷியா முஸ்லிம்களைக்கொண்ட ஈரானுக்கு எதிராக சன்னி முஸ்லிம்களைக் கொண்ட அரபு நாடுகளும், யூதப் பெரும்பான்மையினரைக்கொண்ட இஸ்ரேலும் கூட்டுசேர்வதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுத்திருக்கிறது. அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளுடனான தனது உறவை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்போவதாக இஸ்ரேல் கூறியிருக்கிறது. ஐக்கிய அரபு அமீரகத்தை மற்ற அரபு நாடுகளும் பின்பற்றும் என்று அமெரிக்கா



நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

1948இல் இஸ்ரேல் ஒரு நாடாக அறிவிக்கப்பட்டதிலிருந்து அரபு - இஸ்ரேலிய உறவு மிக மோசமானதாகவே இருந்துவந்திருக்கிறது. இந்த ஒப்பந்தம் அரபு - இஸ்ரேலிய உறவுக்கு நீடித்த நன்மை தரும் என்றாலும், பலஸ்தீன விவகாரத்திலிருந்து அரபு நாடுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்களைத் துண்டித்துக்கொள்வதும் புலனாகிறது. பாலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பது குறித்து இந்த ஒப்பந்தத்தில் எந்தப் பேச்சும் இல்லை. இஸ்ரேல் தனது 1967 ஆம் வருடத்திய எல்லைக்குத் திரும்புவது குறித்து எந்த முடிவும் எடுக்காமலேயே ஒரு அரபு நாட்டுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறது என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹூ கூறியிருக்கிறார். அரபு நாடுகளின் குழு ஆதரவுடன் சவூதி அரேபியா முன்னெடுத்த 'அரபு அமைதி முயற்சி'யானது இஸ்ரேல் ஆக்கிரமித்த பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து அது விலகிக்கொண்டால் இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிப்போம் என்று கூறியது. ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராகவும் சிரியன் கோலன் ஹெய்ட்ஸ் பகுதியின் மீது இஸ்ரேலின் இறையாண்மையையும் ட்ரம்ப் அரசு அங்கீகரித்தவுடன் ஐக்கிய அரபு அமீரகத்துடனான ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பது முரண்பாடானதே. அரபு முன்னெடுப்பிலிருந்து ஐக்கிய அரபு அமீரகம் வெகுதூரம் விலகி வந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

இப்போது நிலவுகின்ற ஒரே கேள்வி, பலஸ்தீன எல்லைகளை மனிதாபிமானத்துக்கு விரோதமாகவும் முறையற்றும் இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதைக் கைவிட்டுவிட்டு, பலஸ்தீனத்துடன் அது பேச்சுவார்த்தை நடத்துமாறு அழுத்தம் கொடுக்க அமீரகத்தால் முடியுமா என்பதுதான். அப்படிப்பட்ட அழுத்தத்தை அமீரகம் கொடுக்கவில்லை என்றால், இஸ்ரேலுடன் அந்த நாடு செய்துகொண்ட ஒப்பந்தத்தால் பலஸ்தீனத்துக்குக் கொஞ்சமும் பலனளிக்காமல் போய்விடும். பலஸ்தீனமும் மேற்கு ஆசியாவில் உருவாகிவரும் யதார்த்தத்தை உணர வேண்டும். அரபு - இஸ்ரேல் மோதல் முடிவுக்கு வரவிருக்கிறது; ஆனால், பலஸ்தீன - இஸ்ரேல் மோதல் எந்த இடைவெளியும் இன்றித் தொடரப்போகிறது என்பதுதான் வருத்தமளிக்கும் அந்த யதார்த்தம்.

# கொரோனா நெருக்கடி இரண்டு ஆண்டுகளுக்குள் நீங்கும்

## உலக சுகாதார ஸ்தாபனம் நம்பிக்கை வெளியிட்டது!

உலகம் முழுவதையும் பாதித்துள்ள கொரோனா நோய்த்தொற்று பரவல் நெருக்கடி, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் முடிவுக்கு வரும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அந்த அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில், ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கூறியதாவது: கொரோனா நோய்த்தொற்று பரவலால் உலகில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் நீங்கிவிடும் என்று நம்புகிறேன். 1918ஆம் ஆண்டு பரவிய ஸ்பெயின் ஃபுளூவிடமிருந்து உலகம் மீள்வதற்கு 2 ஆண்டுகள் ஆனது.

எனவே, அந்த நோயின் தன்மையை ஒத்துள்ள கொரோனா நோய்த்தொற்றும் இரண்டு ஆண்டுகளில் அடங்கக்கூடும்.ஸ்பெயின் ஃபுளூ பரவிய காலகட்டத்தைவிட தற்போது கொரோனா நோய்த்தொற்று மிக வேகமாகவும், அதிகமாகவும் பரவுவதற்கான சூழல் அமைந்துள்ளது. உலகமயமாக்கல், நாடுகளிடையேயான இணைப்பு, நெருக்கமான தொடர்பு போன்ற காரணங்களால் ஸ்பெயின் ஃபுளூவைவிட கொரோனா நோய்த்தொற்று மிகத் தீவிரமாகப் பரவும் நிலை உள்ளது.

ஆனால் அதேநேரம், தற்போது முன்பைவிட அதிக தொழில்நுட்ப வசதிகள் உள்ளன. மேலும், தடுப்பூசி போன்ற கூடுதல் வசதிகளும் தற்போது கிடைக்கக்கூடும். எனவே, 1918ஆம் ஆண்டின் ஃபுளூவைவிடக் கூட குறைந்த காலக்கட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று பரவலில் இருந்து உலகம் விடுபடலாம் என்றார் அவர்.

1918ஆம் ஆண்டு பெப்ரவரி தொடங்கி 1920ஆம் ஆண்டு வரை ஸ்பெயின் ஃபுளூ உலகம் முழுவதும் பரவியது. அப்போதைய உலக மக்கள்தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் - 50 கோடி பேருக்கு அந்த நோய்த்தொற்று ஏற்பட்டது. அந்த நோய் பாதிப்பால் 5 கோடி பேர் வரை உயிரிழந்ததாகக் கருதப்படுகிறது. கொரோனா



நோய்த்தொற்றைப் பொறுத்தவரை, சீனாவின் வூஹான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பரவத் தொடங்கிய அந்த நோய், உலகம் முழுவதும் 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய நிலைவரப்படி உலகம் முழுவதும் 2.3 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு அந்த நோய்த்தொற்று ஏற்பட்டுள்ளது.

இதுவரை 8 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனாவிற்கு பலியாகியுள்ளனர். கொரோனா பலி மற்றும் பாதிப்பு எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அங்கு இதுவரை 58 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை 1.8 இலட்சத்தை நெருங்கி வருகிறது.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக, கொரோனா நோய்த்தொற்றால் பிரேஸில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலைவரப்படி அந்த நாட்டில் 35 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 1.13 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொரோனா காரணமாக உயிரிழந்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# கணவர் தகராறு செய்யாததால் விவாகரத்து கோரிய பெண்!

## இந்தியாவில் நடந்த விசித்திரம்

கணவர், தன்னுடன் தகராறு செய்யாமல் மிகுந்த பாசத்துடன் இருப்பதால், விவாகரத்து வழங்கக் கோரி, பெண்ணொருவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய உத்தரப் பிரதேச மாநிலத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில், பாரதீய ஜனதா ஆட்சி நடக்கிறது. இங்கு, சம்பல் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண், திருமணம் முடிந்த, 18 மாதங்களில் விவாகரத்து கோரி, நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

கணவர், தன்னுடன் எந்த தகராறும் செய்யாததால், இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அவர் கூறுகிறார். இது குறித்து, அவர் கூறியதாவது:

என் கணவர், அளவுக்கதிகமாக நேசிப்பதை, என்னால் ஏற்க முடியவில்லை. என் கணவருடன் வாழ்ந்த, 18 மாதங்களில், அவர் என்னுடன் சண்டையிட்டதே இல்லை. என் தவறுகளை மன்னிப்பதுடன், சமையல் உள்ளிட்ட அனைத்து வீட்டு வேலைகளிலும் எனக்கு உதவுகிறார். என் செயல்களை குறை சொல்லாமல் ஏற்றுக்கொள்வதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

கணவருடன் சண்டை போட வேண்டும் என்ற என் ஆசை நிறைவேறவில்லை. அனைத்தையும் ஏற்கும் அவருடன், வாழ விரும்பவில்லை. இவ்வாறு, அவர் கூறினார். இது குறித்து, அவரது கணவர் கூறும்போது, நான் எந்தத் தவறும் செய்யவில்லை. அவளுக்கு, சிறந்த கணவராக இருக்கவே விரும்புகிறேன்



என்றார். அத்துடன், மனுவை திரும்ப பெறும்படி, மனைவியிடம் கூற வேண்டும் என நீதிமன்றத்தில் முறையிட்டார். இதையடுத்து, மனுவை விசாரணைக்கு ஏற்க மறுத்த நீதிமன்றம், இருவரும் பேசி, பிரச்சினைக்குத் தீர்வு காணும்படி அறிவுறுத்தியது.

# மூக்கு வழியாக கொரோனா தடுப்பு மருந்து: அமெரிக்காவில் சோதனை

மூக்கு வழியாக செலுத்தக்கூடிய கொரோனா தடுப்பு மருந்தை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கி சோதித்து வருகின்றனர். இது குறித்து தகவல்கள் தெரிவிப்பதாவது:

கொரோனா நோய்த்தொற்றை முன்கூட்டிய தடுப்பதற்கான தடுப்பு மருந்துகளை உருவாக்கி, உலகின் பல்வேறு நாடுகள் பரிசோதித்து வருகின்றன. இந்த நிலையில், மூக்கு வழியாகச் செலுத்தக்கூடிய



கொரோனா தடுப்பு மருந்தை அமெரிக்காவின் வொஷிங்டன் மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உள்ளிட்டோர் உருவாக்கி ஆய்வுசெய்து வருகின்றனர்.அந்த மருந்தை எலியிடம் செலுத்தி பரிசோதித்ததில், அதன் செயற்பாடு திருப்திகரமாக இருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இது குறித்து அவர்கள் கூறுகையில், தாங்கள் உருவாக்கியுள்ள கொரோனா தடுப்பு மருந்தை எலிகளின் மூக்கில் செலுத்திய பிறகு, அவற்றின் சுவாசப் பாதைகளில் சக்திவாய்ந்த கொரோனா எதிர்பாற்றல் உருவானதாகத் தெரிவித்தனர்.

எலிகளின் உடலில் அந்த மருந்து வெற்றிகரமாக செயலாற்றியதைத் தொடர்ந்து, குரங்குகளுக்கும், அதனைத் தொடர்ந்து மனிதர்களுக்கும் அந்த மருந்தை மூக்கு வழியாகச் செலுத்தி சோதிக்க விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



# எஸ்.பி.பி. உடல் நிலையில் சிறிது முன்னேற்றம்

பிரபல திரைப்பட பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் உடல்நிலையில், கடந்த சில நாட்களைக் காட்டிலும், நேற்று முன்தினம் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரபல திரைப்பட பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம், 75, கொரோனா பாதிப்பு காரணமாக, சென்னை, எம்.ஜி.எம்., ஹெல்த்கெயார் மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட வார்ட்டில் அவருக்கு மருத்துவ உபகரணங்களின் உதவியுடன் ஒக்ஸிஜன் அளிக்கப்பட்டு வருகிறது. உடல் உறுப்புகள் அனைத்தும் சீராக இயங்கிவரும் நிலையில், நுரையீரல் செயற்பாட்டை மேம்படுத்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இவரது உடல்நிலையில், கடந்த சில நாட்களைக் காட்டிலும் நேற்று முன்தினம் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பெலாரஸில் செய்தி வலைத்தளங்கள் முடக்கம்!

பெலாரஸில் கடந்த வாரம் நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி அலெக்ஸாண்டர் லுகஷென்கோ மீண்டும் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து தீவிர போராட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், அந்த நாட்டில் செய்தி வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. இது குறித்து பெலாரஸ் செய்தியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெலாரஸில் செய்திகளை வெளியிட்டுவரும் 20இற்கும் மேற்பட்ட வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. அமெரிக்க நிதியுதவியுடன் இயங்கும் ரேடியோ லிபர்ட்டி, பெல்சாட், போலந்து நாட்டு நிதியுதவியில் இயங்கும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி ஆகியவையும் இதில் அடங்கும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனிலிருந்து பெலாரஸ் பிரிந்தது முதல் அந்த நாட்டை 26 ஆண்டுகளாக ஆண்டுவரும் சர்வாதிகார ஆட்சியாளர் அலெக்ஸாண்டர் லுகஷென்கோ, கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 80 சதவீத வாக்குகள்




பெற்று மீண்டும் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு செய்து, இந்தத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். தேர்தல் முடிவுகளை எதிர்த்து, நாடு முழுவதும் ஆயிரக்கணக்கானோர் இரண்டு வாரங்களாக தீவிர போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மன்னார் இளம் பெண் கொலை வழக்கில் இரு பெண்கள் கைது!

(மன்னார் நகர்)

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நெடுந்தீவைச் சேர்ந்த இளம்பெண்ணை மன்னாருக்கு அழைத்துச்சென்று கொலைசெய்து உப்பளத்தில் வீசிய சம்பவம் தொடர்பில் அந்தப் பெண்ணின் சகோதரி உள்ளிட்ட இரண்டு பெண்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொலையின் பிரதான சந்தேகநபரான இளம்பெண்ணின் மாமனார் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டுவருகிறார்.

மன்னார் பொலிஸாரின் புலன் விசாரணையில் மன்னார் நகரிலுள்ள உணவகமொன்றின் சி.சி.ரி.வி. கெமரா பதிவை வைத்து நெடுந்தீவைச் சேர்ந்த பெண்கள் இருவரும் ஒரு வாரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். செட்டிகுளத்தில் வசிக்கும் பிரதான சந்தேகநபர் தற்போது தலைமறைவாகியுள்ளார். நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜூயின் (வயது - 21) என்ற இளம்பெண்ணே இவ்வாறு கழுத்து நெரிக்கப்பட்டு கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டு மன்னார் உப்பளத்தில் வீசப்பட்டிருந்தார்.

அவரது சடலம் மன்னார் உப்பளம் பகுதியிலிருந்து கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்பவத்தையடுத்து மன்னார் தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். தடயவியல் பொலிஸாரின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், தடயப்பொருட்களும் மீட்கப்பட்டன. சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையின்படி பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டு, அவரது கால்கள், கைகள் பிடித்து வைத்திருக்கப்பட்ட நிலையில், மூச்சுத்திணறலால் உயிரிழந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.,

இந்நிலையில், சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் அடையாளங்களைக்கொண்டு அவர் தொடர்பில் மடு (மடு ஆலயத் திருவிழா இடம்பெற்ற காலப்பகுதி) மற்றும் மன்னாரில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன்போது மன்னாரிலுள்ள உணவகமொன்றில் கொல்லப்பட்ட இளம்பெண், இரு பெண்கள் மற்றும் ஆண் ஒருவரும் சென்று உணவு உட்கொண்ட



காட்சி பதிவாகியிருந்தது. அந்தக் காட்சியைப்பெற்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர். ஆரம்பத்தில் அந்தப் பெண்கள் நாவற்குழியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அங்கு அவர்கள் இல்லை. தொடர்ச்சியாக முன்னெடுத்த விசாரணைகளில் கொல்லப்பட்ட பெண் நெடுந்தீவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கொல்லப்பட்ட இளம் பெண்ணின் சகோதரி (வயது - 30), அவரது பெரியதாயின் மகனின் மனைவி ஆகிய இருவரும் நெடுந்தீவில் வைத்து நேற்று கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மன்னாருக்கு அழைத்துச்செல்லப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இருவரும் மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளனர்.

அத்துடன், தலைமறைவாகியுள்ள 50 வயதுடைய பிரதான சந்தேகநபரான கொல்லப்பட்ட பெண்ணின் மாமனார் தேடப்பட்டு வருகிறார். "சகோதரியின் கணவருக்கும் கொல்லப்பட்ட இளம்பெண்ணுக்கும் இடையே தொடர்புள்ளதாக அவரது சகோதரி சந்தேகம் கொண்டுள்ளார். இந்தச் சந்தேகத்தால் சகோதரிகள் இடையே முரண்பாடு நீடித்துள்ளது.

இளம் பெண்ணின் தந்தை காலமாகிய நிலையில், தாயார் வெளிநாட்டில் உள்ளார். அவரது தாயின் சகோதரன் செட்டிகுளத்தில் உள்ளார். அவர் வெளிநாட்டு முகவர் நிலையத்துடன் தொடர்புடையவர். அதனால் கொல்லப்பட்ட இளம்பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறியுள்ளார்.

அதனால் கொழும்பில் சில ஆவணங்கள் கையளிக்கவேண்டும் என்று தெரிவித்து சகோதரிகள் இருவரையும் அவர்களது பெரியதாயின் மகனின் மனைவியையும் அழைத்துக்கொண்டு மன்னார் பயணித்துள்ளார். அங்கு நகரில் நடமாடிவிட்டு உப்பளத்தில் எவரும் இல்லை என அறிந்து இளம்பெண்ணை மூவரும் அங்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கு மாமன் கழுத்தை நெரிக்க மற்றைய இரு பெண்களும் கால்களையும் கைகளையும் பிடித்துவைத்திருந்துள்ளனர். உயிர் பிரிந்ததும் அங்கிருந்து தப்பித்துள்ளனர்" - என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மன்னார் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, உப பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள ஆகியோரின் வழிகாட்டலின்கீழ் உப பொலிஸ் பரிசோதகர் கங்காபதி ஆர்த்தனன் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சோமதிலக்க, பொலிஸ் சார்ஜன்ட் பியசேன, பொலிஸ் கொஸ்தாபல் வரதன், நிசாந்தன், பெண் பொலிஙஸ் கொஸ்தாபல் பிரியா மற்றும் பொலிஸ் சாரதி ஜனந்தன் ஆகியோர் அடங்கிய பொலிஸ் பிரிவினர் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020 ஓகஸ்ட் 24ஆம் திகதி, திங்கட்கிழமை

# தமிழ்த் தலைவர்களை அடையாளம் காணும் நேரம்!

நாடாளுமன்றத்தின் கன்னியமர்வில் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரை சர்ச்சையை எழுப்பியுள்ளது. உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ் என்றும் இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்றும் அந்த தமிழ் மொழியில் தனது உரையை ஆரம்பிப்பதாகவும் கூறி பேசினார் விக்கி.

இன்றைய அரசாங்கம் மிகவும் பலமான நிலையில் இருக்கிறது என்று சுட்டிக்காட்டி அதேபோல மறைந்த ஜே. ஆர். ஜெயவர்தனவின் கீழ் யானை பலத்துடன் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை ஏற்படுத்தி இன்று ஒரே ஒரு உறுப்பினர் என்ற அளவுக்கு அதன் பலம் சுருங்கிவிட்டதாக தனதுரையில் கோடிட்டு காட்டிய நீதியரசர் விக்னேஸ்வரன் அதே பிழையை தற்போதைய பொதுஜன பெரமுன அரசும் விட்டு அதே பாதையை தெரிவுசெய்யாது என்று நம்புவதாக கூறினார்.

"எமக்கு இப்பொழுது மிகவும் பலமான ஒரு அரசாங்கம் அமைந்துள்ளது. 1977 ஆம் ஆண்டு இதேமாதிரியான ஒரு அரசாங்கம் ஜே.ஆர். ஜெயவர்தனவின் கீழ் இருந்தது. அந்த ஆட்சியின்போதே 1983 ஆம் ஆண்டு கலவரம் இடம்பெற்றது. அந்த காலத்து யானையாக இருந்து இன்று தனி ஒரு உறுப்பினராக குறுகிப்போயுள்ள பாதையை இந்த அரசாங்கமும் நிச்சயமாக எதிர்காலத்தில் தொடரக்கூடும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

கடந்த காலத்தில் நாம் விட்ட பிழைகளில் இருந்து பாடம் படித்து எல்லா சமூகங்களும் ஒருவருக்கு ஒருவர் மதிப்புடனும் சமனாகவும் உணருகின்றவகையிலும் இலங்கை தாய்நாட்டின் பிள்ளைகள் நாம் என்ற இறைமையுடனும் பெருமையுடனும் நடைபோடும் வகையிலுமான சமாதானமும் செழிப்பும் மிக்க ஒரு காலத்தை ஏற்படுத்துவார்கள் என்றும் நம்புகிறேன்" என்று விக்னேஸ்வரன் கூறினார்.

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றி அழுத்தம் திருத்தமாக தனது உரையில் விக்னேஸ்வரன் வலியுறுத்தினார். "குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையுடன் மரபு பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் தேசம் என்று அங்கீகரிக்கப்படுவதன் பிரகாரம் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன், கடந்த காலம் பற்றிய தவறான வரலாற்று கண்ணோட்டங்களை களைந்தால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் உதயமாக முடியும்" என்றும் அவர் கூறினார்.

சிங்கள மேலாதிக்க அதிகாரத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதையும் விக்னேஸ்வரன், தனது இந்த உரையில் திட்டவட்டமாக குறிப்பிட்டார்.

பௌத்த மதத்தைப் பின்பற்றும் ஒரு நாட்டிலே மேலாதிக்க அதிகார பிரயோகத்தை நாங்கள் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஏனென்றால் சிங்கள கிராமத்தவர்கள் ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை இருக்கும் என்பதற்காக பின்வரும் பழமொழியை கூறுவார்கள் என்பது எமக்குத் தெரியும். அதாவது முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும் என்பதே அது."

என்று சுட்டிக்காட்டினார் விக்கி. இந்த உரை சர்ச்சையை ஏற்படுத்தி இப்போது பெரும் விவாதப்பொருளாக மாறியுள்ளது. கண்டியில் மகாநாயக்க தேரர்களை சந்திக்கச் சென்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம், செய்தியாளர்கள் இதுபற்றி கேள்வியெழுப்பினர். இதுபற்றிய முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக கூறிய அவர் அவைபற்றி ஆராயப்படுமென குறிப்பிட்டார். சபாநாயகர் என்பதால் பொதுவெளியில் கருத்தைத் தெரிவிக்க முடியாத நாகரீகத்தை அவர் பேணியிருக்கிறார். மறுபுறம் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி. ஆகியோரும் விக்கியின் உரையை கட்சி பேதமின்றி விமரிசித்துத் தள்ளியிருக்கின்றனர்.

விக்னேஸ்வரனின் இந்த உரை குறித்து முதலில் நாடாளுமன்றத்தில் சர்ச்சையை எழுப்பியவர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார. தமிழர்களுக்கு தீர்வைத் தருவதாகவும் சமவுரிமை உடையவர்கள் என்று கூறி அவர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இவ்வாறு நடந்துகொண்டமை ஏற்புடையதுதானா? சிங்கள மக்களை கவர இதனை செய்வீர்களானால் தமிழர் உரிமை பற்றி நீங்கள் பேசியவையெல்லாம் பொய்தானா?

தமிழ் தொன்மை வாய்ந்த மொழியா இல்லையா? தமிழர்களுக்கு இந்நாட்டில் சுயநிர்ணய உரித்து இருக்கிறதா? இல்லையா? என்பதை ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள தமிழ் முஸ்லிம் தலைவர்கள் தெளிவுபடுத்தவேண்டும். சிலவேளை மனுஷ நாணயக்கார எம்.பி.யின் கோரிக்கை ஏற்கப்பட்டு விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற கருத்து ஹன்ஸாட்டில் இருந்து நீக்கப்பட்டால் தமிழ்ச் சமூகம் அல்ல, மனச்சாட்சியும் உங்களை மன்னிக்காது. உங்கள் முதுகெலும்பற்ற தன்மையை வரலாறும் பதிவிடும்.

எனவேதான் உண்மையான தமிழ்த் தலைவர்களை அடையாளம் காணும் நேரம் இது!

"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# விமர்சனங்களைத் தவிர்த்து இந்திய வம்சாவளியினரின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம்

**- சின்னையா பக்தசீலன் -**

கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்ற தேர்தலில் பொதுஜன முன்னணி 68,53,690 (59.09%) வாக்குகளைப் பெற்றதன்மூலம் ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் 128 ஆசனங்களையும், அந்தக் கட்சி பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தேசியப்பட்டியல் மூலம் 17 ஆசனங்களையும் அதன் கூட்டு கட்சிகளின் 6 ஆசனங்களையும் பெற்று மொத்தமாக 151 ஆசனங்களைப் பெற்று ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்துள்ளது.

இலங்கை வரலாற்றில் கடந்த காலங்களில் மாறி மாறி ஆட்சியமைத்த இந்த நாட்டின் பழைமைவாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தில் எந்தவொரு ஆசனத்தையும் பெறமுடியாத விதத்தில் தோல்வியைத் தழுவியது. மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்குச் சென்றுள்ளபோதிலும் நாடாளுமன்றத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான ஆசனங்களை தக்கவைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்துசென்று ஐக்கிய மக்கள் சக்தி இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில் 27,71,980 (23.90%) வாக்குகளைப் பெற்று - ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைவிட 40,80,710 வாக்குகளை குறைவாக பெற்று நாடாளுமன்றத்தில் 47 ஆசனங்களையும் அந்தக் கட்சி பெற்ற வாக்குகளின் அடிப்படையில் தேசியப்பட்டியல் மூலம் 7 ஆசனங்களையும் பெற்று மொத்தமாக நாடாளுமன்றத்தில் 54 ஆசனங்களைப் பெற்றுள்ளது. இந்த ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் மேடைகளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொதுமக்களிடம் மூன்றில் இரண்டு வாய்ப்பு பெரும்பான்மையை பெற்றுத்தரும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இந்த வெற்றியின் மூலம் இந்த நாட்டுக்கு நிலையான ஆட்சி கிட்டியுள்ளது.

இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களைப் பொறுத்தவரையில் அந்த மக்கள் பிரதிநிதித்துவம் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு ஒன்பதாவது நாடாளுமன்றத்திலும் எட்டாவது நாடாளுமன்றத்திலும் கிடைத்ததுபோன்று 6 ஆசனங்களே கிடைத்துள்ளன. தமிழ் முற்போக்குக் கூட்டணி நடந்துமுடிந்த ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைலையிலான ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்தபோதும் தமிழ் முற்போக்குக் கூட்டணி பெற்ற நாடாளுமன்ற ஆசனங்களில் வீழ்ச்சி ஏற்படவில்லை. அதற்குக் காரணம் தமிழ் முற்போக்குக் கூட்டணி இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் மேம்பாட்டுக்காக குறிப்பிடத்தக்க சேவைகளை செய்தமையும் மலையக அரசியல் வரலாற்றில் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஏற்படுத்திய புதிய அரசியல் கலாசாரமுமாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான தனி வீடமைப்புத் திட்டத்தின் மூலம் தமிழ் முற்போக்குக் கூட்டணி புதிய கிராமங்களை உருவாக்கி மாற்றுக் கட்சிகளில் செயற்பட்டவர்களின் பெயர்களிலும் பல்வேறு துறைகளில் தடம் பதித்தவர்களின் பெயர்களிலும் புதிய கிராமங்களுக்கு நாமம் சூட்டியமை. நாடளாவிய ரீதியில் கல்வி மேம்பாட்டுக்காகவும் இந்து கலாசார மேம்பாட்டுக்காகவும் செயற்பட்டதன் மூலமும் முறையே பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், மனோ கணேசன் ஆகியோர் தமது கடமைகளை மலையக மக்களின் பேரபிமானத்தைப் பெறக்கூடிய விதத்தில் செய்தமையாலேயே அந்தக் கட்சி பெற்ற ஆசன எண்ணிக்கையில் சரிவு ஏற்படவில்லை. நாடளாவிய ரீதியில் கிளம்பிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எனும் பேரலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணி அடித்துச் செல்லப்படாததற்கும் அதுவே காரணம் என்று குறிப்பிடின் தவறல்ல.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு அதனது தலைவரான ஆறுமுகன் தொண்டமானை இழந்ததன்மூலம் பேரதிர்ச்சிக்குள்ளானது. இந்த நாட்டின் எட்டாவது நாடாளுமன்றத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு இரண்டு ஆசனங்கள் இருந்தன.

அதே எண்ணிக்கையே ஒன்பதாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு கிடைத்துள்ளது. ஆறுமுகன் தொண்டமானால் பிரதிப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட ஆறுமுகன் தொண்டமானின் ஒரே புதல்வனான ஜீவன் தொண்டமான் ஏறத்தாழ ஒரு இலட்சத்து பத்தாயிரம் வாக்குகளைப் பெற்றதன் மூலம் நுவரெலியா மாவட்டத்திலேயே அதிகூடிய வாக்குகளைப் பெற்று கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை கண்டி ஸ்ரீதலதா மாளிகை வளாகத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜீவன் தொண்டமான் இருபத்தாறு வயது இளைஞர். அவர் தேர்தல் மேடைகளில் தெரிவித்த கருத்துகள் மூலம் இந்த நாட்டின் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் உள்ளங்களை கவர்ந்துள்ளதோடு அவர் திறமையாக செயற்படக்கூடியவர் என்பதையும் கோடிட்டு காட்டியுள்ளார். ஜீவன் தொண்டமானுக்கு அரசியலில் அவ்வளவாக அனுபவம் இல்லாதபோதிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தேசிய ரீதியிலான வீடமைப்புத்துறைக்குப் பொறுப்பான அமைச்சராக இருப்பதனால் அவரின் ஒத்துழைப்புகளையும் பெறுவதோடு தனது தந்தை ஆறுமுகன் தொண்டமான் மறைவதற்கு முன்பு பிரதமரிடம் பேசிய விடயங்களுக்கான தீர்வுகளையும் பெற்று அவரின் கனவை நிறைவேற்ற வேண்டும்.

ஒருவர் இறந்த பின்பு அவர் உயிருடன் இருந்தபோது மேற்கொண்ட செயற்பாடுகளை விமர்சிப்பது பண்பல்ல. ஆனாலும் இங்கு ஒரு விடயத்தை சுட்டிகாட்ட வேண்டும். அது என்னவெனில், கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் மூன்று வேட்பாளர்களை களமிறக்கியிருந்து அவர்களுக்கான பிரசாரங்களை உரிய முறையில் மேற்கொண்டிருந்தால் மூவருமே வெற்றிபெற்றிருக்க முடியும். அதற்கு மாறாக, நுவரெலியா மாவட்டத்தில ஐவரை களமிறக்கியதனால் இரண்டு பேர் மாத்திரமே வெற்றிபெற முடிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

> "ஏனைய கட்சிகளை விமர்சிப்பதைத் தவிர்த்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கட்டுக்கோப்பை பேணி அனைத்து இந்திய வம்சாவளித் தமிழர்களின் மேம்பாட்டுக்காக ஜீவன் தொண்டமான் செயற்பட வேண்டும்."

மலையக அரசியல் கட்சிகளின் தலைவர்களில் சிலர் 1977ஆம் ஆண்டுக்குப் பின்பு முதல் தடவையாக மலையகத்துக்கு முழு அமைச்சு கிட்டாமை பற்றி விசனம் தெரிவித்துள்ளார்கள்.

எடுத்த எடுப்பிலேயே அமைச்சராக முடியாது. கிடைத்துள்ள தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சை திறம்பட கையாள்வதன் மூலம் ஜீவன் தொண்டமானுக்கு எதிர்காலத்தில் முழு அமைச்சராகக்கூடிய வாய்ப்பு கிட்டும்.

இந்த நாட்டின் தேசிய தமிழ் வார பத்திரிகை ஒன்று தனித்துநின்று பெயரெடுக்கவேண்டிய நிலையில் ஜீவன் தொண்டமான் எனக் குறிப்பிட்டிருந்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் கல்வி கற்ற, ஏற்கனவே அரசியலில் ஈடுபட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை அமைச்சர்கள், அங்கத்தவர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளார்கள்.ஜீவன் தொண்டமான் இந்த நாட்டில் வாழும் ஒட்டுமொத்த இந்திய வம்சாவளித் தமிழர்களின் தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவ்வப்போது தொலைக்காட்சி சேவைகள், பத்திரிகைகள் சுட்டிக்காட்டும் பிரச்சினைகளை அரசாங்கத்தின் (துறைசார் அமைச்சர்களின்) கவனத்திற்கு கொண்டுவந்து மேலே குறிப்பிட்டுள்ள தரப்பினரிடம் அந்த பிரச்சினைகளை கையாளும் பொறுப்புகளை ஒப்படைத்து அவர்களையும் செயற்பட வைக்கவேண்டும்.

ஜீவன் தொண்டமான் சமீபத்தில் தனியார் வானொலிக்கு வழங்கிய பேட்டியில் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடளாவிய ரீதியில் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் வாக்குகளைப் பெற்றபோதிலும் அதற்கு தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற அங்கத்துவம் கிட்டாதபோதும் நவீன் திசாநாயக்கவின் இளைய சகோதரனான மயந்த திசாநாயக்கவுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டார். கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இந்த நாட்டின் சிறுபான்மைக் கட்சிகளில் பெரும்பாலானவை சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையே ஆதரித்தனர்.

பேரினவாத அலைகள் வீசிக்கொண்டிருந்த ஒரு சூழ்நிலையில் ஒரு சிறுபான்மைக் கட்சிக்கு தேசியப்பட்டியலில் நாடாளுமன்ற உறுப்புரிமை கேட்பதனால் பெரும்பான்மை மக்களின் வெறுப்பை சம்பாதிப்பதன் மூலம் விரும்பத்தகாத சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடாது என்பதனாலேயே மனோ கணேசன் அவ்வாறு செயற்பட்டு தனது மதிநுட்பத்தை வெளிப்படுத்தினார். அத்தகைய ஒரு செயற்பாடு இராஜதந்திரத்துடன் கூடிய செயற்பாடு என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

பெருந்தோட்டங்களில் பாதை வசதிகளின்மை, குடிநீர் வசதியின்மை, போதிய சுகாதார வசதிகளின்மை பாடசாலைகள் பெயரளவில் இருந்தும் அவற்றில் மின்சார குடிநீர் போக்குவரத்து வசதிகளின்மை, கட்டட வசதிகளின்மை, ஆசிரியர் பற்றாக்குறை, தபால் வசதிகளின்மை, தோட்டக் குடியிருப்புகளில் இளைஞர், யுவதிகள் தொழிலின்றி இருத்தல் போன்ற பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன.

எனவே, ஜீவன் தொண்டமான் மேலே குறிப்பிட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தியாக்கும் பொறுப்புகளை அந்தத் தரப்பினரையும் செயற்பாடுகளில் ஈடுபட செய்யவேண்டும். இவ்வாறு செயற்படுவதன் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களின் அனைத்துத் தரப்பினரதும் பேரபிமானத்தைப் பெறமுடியும்.

பத்திரிகை செய்திகளின்படி இந்திய அரசாங்கத்தின் மூலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக்கொடுத்த தோட்டத் தொழிலாளர்களுக்கான நான்காயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அதன்பின்பு இந்திய அரசாங்கம் ஒத்துக்கொண்ட பத்தாயிரம் வீடுகள் இன்னும் முற்றுமுழுதாக நிர்மாணிக்கப்படவில்லை. எனவே, ஜீவன் தொண்டமான் அந்த பத்தாயிரம் வீடுகளில் அவ்வப்போது இயற்கை அனர்த்தங்கள், தீ விபத்துகள், மின் ஒழுக்கு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கும், பெருந்தோட்டங்களில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் சவால் நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கும் வீடுகளை நிர்மாணித்து வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

அரசாங்கத்தினால் வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியைக்கொண்டும் நாடளாவிய ரீதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகளை நிர்மாணித்து வழங்கவேண்டும். இவ்வாறு செயற்படுவதனால் எதிர்காலத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த நாட்டில் இழந்த செல்வாக்கை மீளவும் பெறுவதோடு இந்த நாட்டில் ஆட்சியை உருவாக்கும் சக்தியாக மிளிரக்கூடிய வாய்ப்பு கிட்டி வீறுநடை போட முடியும். பொறுத்திருந்து பார்ப்போம்.

நல்லாட்சி அரசாங்கம் பதவியிலிருந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கான தனிவீட்டுத் திட்டங்களுக்கு பெருந்தோட்டங்களில் காணி போதியளவில் ஒதுக்கப்படவில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் ஐம்பது ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்க அந்த அரசாங்கம் இணங்கியபோதும் முன்னாள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க காணிகளை ஒதுக்கவும் இல்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த ஊக்குவிப்புத் தொகையாக ஐம்பது ரூபாவை வழங்கவும் இல்லை.

வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கு விரோதமாக செயற்பட்டதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்தில் ஒரு ஆசனத்தைக்கூட பெறமுடியாத நிலை ஏற்பட்டது. (ஏழை வடித்த கண்ணீர் .. ) முன்னைய நல்லாட்சி அரசாங்கத்தில் மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சராக செயற்பட்ட பழனி திகாம்பரம் திறமையாக செயற்பட்டார். ஆனால், அவர் ஏனோ அவ்வப்போது உடனுக்குடன் செயற்படவேண்டிய விடயத்தில் கரிசனை காட்டவில்லை. நாடளாவிய ரீதியில் தோட்டத் தொழிலாளர்கள் அவ்வப்போது மண்சரிவு, தீ விபத்து, வெள்ளம், புயல், நில தாழ்விறக்கம் ஆகியவற்றால் தமது குடியிருப்புகளை இழந்தபோது அத்தகையவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து துரிதமாக செயற்பட தவறினார்.

எனவே, புதிதாக நியமனம் பெற்றுள்ள தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சரான ஜீவன் தொண்டமான், எந்தவொரு மலையக கட்சியின் கடந்தகால செயற்பாடுகளையும் விமர்சிக்காது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏனைய உறுப்பினர்களும் ஏனைய மலையக கட்சியினரையும் விமர்சிப்பதை தவிர்த்து செயற்படும்படி ஆலோசனை வழங்க வேண்டும்.

ஜீவன் தொண்டமான் நாடளாவிய ரீதியில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களில் அனைத்துத் தரப்பினரதும் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வுகளை காணவேண்டும். அதன் பின்பு வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கான செயற்பாடுகளை அவர் முன்னெடுக்க வேண்டும்.

உதாரணமாக, இறுதியாக நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட வடிவேல் சுரேஷ், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக்கட்சியான மலையக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்ட அருணாசலம் அரவிந்தகுமார் தேர்தல் மேடைகளில் பொதுமக்களை தம் இருவருக்குமே வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டதன் மூலம் இணக்க அரசியலை முன்னெடுத்தமையாலும் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், மயில்வாகனம் உதயகுமார் ஆகியோரும் பொதுமக்களை தம் மூவருக்கும் வாக்களிக்கும்படி கேட்டுகொண்டதன் மூலம் வெற்றி பெற்றமையை இங்கு குறிப்பிடலாம்.

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு நண்பர் நேற்று தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கட்சியின் மறைந்த தலைவர் அஷ்ரபின் அடக்கஸ்தலத்திற்கு சென்றுதான் நாடாளுமன்ற கன்னியமர்வுக்கு சென்றார்கள் என்றார். அதுவும் 20 வருடங்களுக்கு பின்னர் நடந்தது என்று குறிப்பிட்டார் நண்பர். கட்சியின் எம்.பி.க்கள் யாராவது ஆளுங்கட்சிக்கு சென்றுவிடலாம் என்று அச்சம் உள்ளதால் மறைந்த தலைவர் அடக்கஸ்தலம் சென்று அஞ்சலி செலுத்தினால் அப்படி செல்ல இருப்பவர்களின் மனம் மாறிவிடும் என்ற நம்பிக்கையால் தான் அப்படி செய்யப்பட்டதாகவும் அந்த நண்பர் மேலும் விபரித்தார். நான் பதில் கூறாமல் அமைதி காத்தேன். நாம் ஏதாவது சொல்லப்போய் நமக்கேன் வம்பு?

- சிவா -
siva@liberty.lk

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை!

## - பிரதமர் மஹிந்த அறிவுறுத்தல் -





சிறு மற்றும் பெரும்போகம் ஆகிய இரு சந்தர்ப்பங்களிலும் வடமேல் மாகாணத்தில் 12,500 ஹெக்டேயர் விவசாய நிலங்களை வளப்படுத்தும் வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தை துரிதப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அறிவுறுத்தியுள்ளார்.

மஹிந்த சிந்தனை கொள்கையின்கீழ் 2014இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் கடந்த அரசாங்க காலத்தில் நிறுத்தப்பட்டது.


குருநாகல், மொரகொல்லாகம, சியம்பலன் கமுவவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது உத்தேச வடமேல் மாகாண கால்வாய் திட்டம் குறித்த திட்ட அறிக்கை, திட்ட பணிப்பாளர், பொறியியலாளர் அசோக பெரேராவினால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது. இதேவேளை, சியம்பலன்கமுவ மீனவ சங்கத்தினரும் பிரதமரிடம் முன்மொழிவொன்றை சமர்ப்பித்தனர்.

வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தின் ஊடாக பிரதேசத்தின் 350 சிறிய குளங்கள் மற்றும் 8 பாரிய குளங்களை வளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், ஹக்வட்டுன நீர்த்தேக்கத்தின்கீழ் 2,500 ஹெக்டேயர், மீ ஓய நீர்ப்பாசன அமைப்பில் 3,500 ஹெக்டேயர் உள்ளடங்கலாக மொத்தமாக 12 ஆயிரத்து 500 ஹெக்டேயர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை செயற்படுத்தப்படுவதன் ஊடாக பெரும்போகத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த சாகுபடி நடவடிக்கைகள் சிறு, பெரு ஆகிய இரு போகங்களிலும் சாகுபடி செய்யக்கூடிய வகையில் நீர் விநியோகிக்கப்படும். கடுமையான குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுப்பதன் ஊடாக சிறுநீரக நோய் குறித்த பிரச்சினையை தீர்த்தல், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மற்றும் மனிதர்களுக்கும் காட்டுயானைகளுக்கும் இடையிலான போராட்டத்தைக் குறைத்தல் உள்ளிட்ட பல நன்மைகள் இந்த வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் ஹிரியாகல ஹத்பத்துவ தலைமை நீதிமன்ற சங்கநாயக்கர் திஹவ கஸ்ஸன்தளுபொத மற்றும் நாகொல்ல ரஜமஹா விகாரையின் உப விகாராதிபதி கனேகொட ரத்னஜோதி தேரர், மெதகொட அபயதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர், வடமேல் மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முசம்மில், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, கால்நடை பண்ணை மேம்பாடு மற்றும் பால் கைத்தொழில்துறை அமைச்சர் டீ.பீ.ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன, வடமத்திய மாகாணத்தின் முன்னாள் முதல்வர் எஸ்.எம்.ரஞ்சித், பிரதேச அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் உள்ளிட்ட பிரதேசவாசிகள் பலர் கலந்துகொண்டனர்.

# முன்னாள் தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட் மக்கள் காங்கிரஸிலிருந்து இடைநிறுத்தம்!



சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான ஏ.எம்.எம்.நௌஷாட், அக்கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அத்துடன், கட்சி சார்ந்து அவர் வகித்த பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் நலன்களுக்கு எதிராகவும், நெறிமுறைகளை மீறி செயற்பட்டமையினாலுமே அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். கடந்த பொதுத்தேர்தல் காலத்தில், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் நௌஷாட்டின் பேச்சுகளும் செயற்பாடுகளும் கட்சிக்குப் பாதகமாக அமைந்ததனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனுக்கு கட்சி யாப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவே, அவர் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அகலவத்தையில் ஒலி இறுவட்டு வெளியீடு

அகலவத்தை, டார்டன்பீல்ட் கணபதி அறநெறி பாடசாலைக்காக தயாரிக்கப்பட்டுள்ள அறநெறி கீதம், ஒலி இறுவட்டு வெளியீட்டு விழா எதிர் வரும் ஓகஸ்ட் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அகலவத்தை, டார்டன்பீல்ட் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழர் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்ச்சிகளுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், களுத்துறை மாவட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ஆசிரியர்கள் மற்றும் சமூக தன்னார்வலர்கள் உள்ளிட்ட சிலருக்கு கௌரவம் வழங்கப்பட வுள்ளதுடன், அகலவத்தை பிரதேச செயல கத்தின் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், சமூக தன்னார்வலர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

# வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் மூவர் பலி!

நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் மூவர் உயிரிழந்துள்ளனர். பெம்முல்ல, அஹுங்கல மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வெயான்கொட பொலிஸ் பிரிவுக்குட்ப்பட்ட நயிவல உடுகம்பொல வீதியில் நயில்வல பிரதேசத்தை நோக்கி பயணித்த லொரி, அதே திசையில் பயணித்த சைக்கிள்மீது மோதியதால் விபத்து நேர்ந்துள்ளது. இந்த விபத்தில் படுங்காயங்களுக்குள்ளான சைக்கிளில் பயணித்த நபர் கம்பஹா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் உயிரிழந்தவர் 78 வயதுடையவர் என்பதோடு, அவர் வீகொட, பெம்முல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இதேவேளை, அதேதினம் அஹுங்கல்ல பொலிஸ் பிரிவுக்குடப்பட்ட வெலிக்கந்த, அஹுங்கல பிரதேச வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் 15 வயதுடைய சிறுவரொருவர் அந்த லொறியை ஓட்ட முயற்சித்ததால் அந்தப் பிரதேசத்தில் சைக்கிள் ஓட்டிக்கொண்டிருந்த இன்னுமொரு சிறுவர் மீது மோதியதால் மேலுமொரு விபத்துச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. அந்த விபத்தில் படுங்காயங்களுக்குள்ளான சிறுவர் பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு உயிரிழந்த சிறுவன் 11 வயதடையவர் என்பதோடு வெலிகந்த, அஹுங்கல பிரதேசத்தைச் சேர்ந்தவராவர்.

அதேபோன்று, நேற்று முன்தினம் மொரகஹாகந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹொரணை, கலகெதர பீ 123 வீதியில் மில்லேவ பிரதேசத்தில் கலகெதர திசையிலிருந்து ஹொரண திசையை நோக்கி பயணித்த சைக்கிள் நேரெதிராக வந்த ரிப்பர் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியதால் விபத்தொன்று நேர்ந்துள்ளது. இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளாகிய சைக்கிள் ஓட்டுனர் ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 32 வயதுடையவர் என்பதோடு, கடுகிதுல, நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

இவ்வாறு உயிரிழந்த மூவரினதும் சடலங்களும் முறையே கம்பஹா, பலப்பிட்டிய மற்றும் ஹொரண வைத்தியசாலைகளில் பிரேத பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ளதோடு, இந்த விபத்துகள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வரவு–செலவுத் திட்டத்தில் உள்ளூர், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிவாரணம்

## -அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு



வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வழிமுறைகளை அறிமுகப்படுத்தவேண்டியது அவசியம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் பாரம்பரிய கைத்தொழில் உற்பத்திகளுக்கு அதிகபட்ச கேள்வியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கம் என்று குறிப்பிட்ட நிதி இராஜாங்க அமைச்சர், வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளூர் உற்பத்தி மற்றும் கைத்தொழில் துறைக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் கூறியுள்ளார். முதலீடுகளை வலுப்படுத்தக்கூடிய பொறிமுறையொன்றைத் தயாரித்து தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். மேலும், அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கு உள்ளூர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

# முச்சக்கரவண்டியில் மோதுண்ட பாடசாலை மாணவி

பொகவந்தலாவை பகுதியில் மேலதிக வகுப்பிற்கு சென்று வந்து கொண்டிருந்த சிறுமி முச்சக்கரவண்டி ஒன்றில் மோதுண்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (23) முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பலத்த காயங்கள் எதுவும் குறித்த சிறுமிக்கு ஏற்பவில்லையெனவும் முச்சக்கர வண்டி சென்று கொண்டிருந்த போது வீதியை கடக்க குறித்த சிறுமி முற்பட்ட போதே முச்சக்கர வண்டியில் மோதுண்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஊருக்குள் புகுந்த யானை வீட்டுக் கிணற்றுக்குள் விழுந்தது!

## -முல்லைத்தீவில் நேற்று சம்பவம் -



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஊருக்குள் நுழைந்த காட்டு யானையொன்று கிராமவாசி ஒருவருடைய கிணற்றில் விழுந்துள்ளது

வழக்கமாகவே அடிக்கடி ஊருக்குள் நடமாடித் திரியும் இந்த காட்டு யானை, நேற்றும் ஊருக்குள் நடமாடித் திரிந்த சமயம் கிராமவாசியொருவரின் கிணற்றில் தவறி விழுந்துள்ளது. கிணற்றில் விழுந்த யானையை வெளியேற்றுவதற்காக உரிய அதிகாரிகளுக்கு மக்களால் தகவல் வழங்கப் பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் தொடர்ச்சியாக காட்டு யானையின் அச்சுறுத்தலின் மத்தியில் மக்கள் வாழ்ந்துவருவதாக குறிப்பிடுகின்றனர். இதனால், யானை வேலி அமைக்குமாறு மக்கள் கோரி வருகின்றனர்.

குறிப்பாக, கடந்த சில நாட்களாக குறித்த பகுதியில் காணப்படும் தரம் 5இற்குட்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்திற்குள் யானைகள் நடமாடி திரிவதனால் மாணவர்கள் அச்சத்தின் மத்தியில் பாடசாலைக்கு சென்றுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மக்களின் அச்சமான வாழ்க்கைச் சூழலைப் போக்கும் முகமாக இந்தக் கிராமத்திற்கு யானை வேலியை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யானை - மனிதர் மோதலுக்கு இலங்கையில் இன்னும் தகுந்த தீர்வு காணப்படாததால் யானைகளின் வாழ்விடங்கள் சுருங்கிச் செல்வதுடன், அவற்றின் உயிரிழப்பும் அதிகரித்து வருகிறது. மறுபுறத்தில் யானைகளால் மக்களுக்கு ஏற்படும் உயிரிழப்பும் அதிகரித்துள்ளது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதவிகளை தன்னிச்சையாக வழங்க யாருக்கும் அதிகாரம் இல்லை

## சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவிப்பு



(மன்னார் நகர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் யார்? ஊடகப் பேச்சாளர் யார்? என்பதை தீர்மானிப்பது நாடாளுமன்றக் குழுவுடன் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்துதான் அதை தீர்மானிக்க வேண்டும். ஆனால், அப்படி ஒரு கூட்டம் இதுவரை இடம்பெறாத சூழ்நிலையில், பத்திரிகையில் தெரிவு இடம்பெற்றுவிட்டதாக செய்திகள் பிரசுரமாகியுள்ளமை ஆச்சரியமாக உள்ளது. நிச்சயமாக எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நாடாளுமன்ற அமர்வு கள் இருக்கின்றன. அந்தநேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர்கள் இணைந்துதான் அந்தத் தீர்மானத்தை மேற்கொள்வார்களேயொழிய, அதை தன்னிச்சை யாக வழங்க யாராக இருந்தாலும் அவர்களுக்கு அதிகாரம் இல்லை - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் உயர்மட்ட குழுவினர் மற்றும் உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு பின்னடைவை சந்தித்திருக்கின்றது 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கு சார்பாக தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் விழுந்த வாக்கு வீதங்களின் அடிப்படையில் இதை ஒரு பின்னடைவாக கருதுகின்றோம்.

அதனடிப்படையில் இன்று மன்னார் மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் எதிர்காலத்தில் எவ்வாறான நடைமுறைகளை கையாளவேண்டும், தேர்தல் முடிவுகளில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைக்கு மிகக் குறைவாக வாக்களிக்க காரணம் என்ன, அதை எதிர்காலத்தில் எப்படி சரிசெய்ய வேண்டும் என்பதை அடிப்படையாகக்கொண்டு 10 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்காமல் ஏன் வேறு கட்சிகளுக்கு வாக்களித்தனர்? அவ்வாறு வாக்களித்ததன் பிரதான நோக்கம் என்ன? இதில் கட்சி சார்ந்த தவறுகள் ஏதும் இருக்கின்றதா அல்லது எனது கட்சி சார்ந்த ஆதரவாளர்களின் தவறுகள் இருக்கின்றதா? என்று ஆராய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் கட்சிக்குள் மன்னார் மாவட்டத் திலுள்ள இளைஞர், யுவதிகளை பிரதேச ரீதியாக உள்வாங்குவது தொடர்பான தீர்மானமும் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், வாக்காளர்களாக தங்களை பதிவுசெய்த வாக்காளர்கள் தங்களுடைய அனைத்து செயற்பாடுகளையும் புத்தளத்திலேயே மேற்கொள்கின்றார்கள்.

ஒருசில அரசியல்வாதிகள் தங்களுடைய இலாபத்துக்காக அவர்களை பயன்படுத்துகின்றனர் அதை நீக்கவேண்டும் என்ற தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக இம் மாதம் இடம்பெறவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் இந்தத் தீர்மானங்கள் கட்சியின் தலைமையிடம் சமர்ப்பிக்கப்படும் என்பதுடன், தற்போதைய பின்னடைவை பாடமாகக்கொண்டு பிரிந்திருக்கும் வேறு கட்சிகளைச் சேர்ந்த தமிழ் வேட்பாளர்களையும் இணைத்து பயணிக்க கட்சி ஏகமனதாக தீர்மானம் எடுத்தது. நானும் அதற்குத் தயாராகவுள்ளேன் - என்றார்.

# சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சினூடாக நாடளாவிய ரீதியில் ஆங்கில மொழித் திட்டம்

(இரத்தினபுரி)

உயர்தர பரீட்சைத் தேர்வில் கலை மற்றும் வணிகத்தில் தேர்ச்சிபெற்று பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படும் மாணவர்கள் மற்றும் அவர்கள் கல்விகற்ற பாடசாலைகளை





மையமாகக்கொண்டு சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சினூடாக நாடளாவிய ரீதியில் சிறப்பு ஆங்கில மொழி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்தில் இந்தத் திட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு கல்வி கற்பிக்கும் பட்டறை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் தலைமையில் கடந்த 20ஆம் திகதி இரத்தினபுரி மேனெரிபிட்டியவிலுள்ள கல்வி மேம்பாட்டு பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ கருத்து தெரிவிக்கையில்,

"பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற கலை மற்றும் வர்த்தக பட்டதாரிகளுக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச வேலை தேடுபவர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடனேயே இந்த ஆங்கில மொழித் திட்டத்தை செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டத்திற்காக 1,800 இலட்சம் ரூபா கடனை உலக வங்கி வழங்கியுள்ளதையடுத்து, இது 2018 முதல் 2026 வரை செயற்படுத்தபட்டுள்ளது.

தற்போது இந்தத் திட்டம் நாடளாவிய ரீதியில் 500 பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஆங்கிலமொழிக்கு முன்னுரிமை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இங்கு கருத்து தெரிவித்த சப்ரகமுவ மாகாண ஆளுநர் கூறினார்.

1950ஆவது ஆண்டுக்குப் பிறகு, தாய்மொழியை அடிப்படையாகக்கொண்ட கல்வித் திட்டம் ஒரு நல்ல விடயம். ஆனால், நாங்கள் ஆங்கில மொழிக் கல்வியைக் கைவிட்டதால் உலகளாவிய அறிவைப் பெறுவதற்கான வாய்ப்பை இழந்தோம்.

இந்த ஆங்கில மொழித் திட்டம் தேர்வில் தேர்ச்சி பெற மட்டுமல்ல, இது தேசிய மற்றும் சர்வதேச அளவில் சரியான தகவல் தொடர்புகளுக்கு பயன்படுத்தப்படவேண்டும்.

இந்தத் திட்டம் உலக வங்கியின் 1,800 இலட்சம் ரூபா கடனுடன் செயற்படுத்தப்படுகிறது. அதை சரியாகப் பயன்படுத்துங்கள். அதை ஒருநாள் நம் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகள் திருப்பிச் செலுத்தவேண்டும். வெற்றிகரமான கடன் திட்டங்களைச் செய்யுங்கள் அல்லது வருங்கால சந்ததியினர் நம்மை சபிப்பார்கள்" - என்று கூறினார்.

சப்ரகமுவ மாகாண மேலதிக கல்வி இயக்குநர் சந்திரிகா மாத்தர ஆராச்சி, கல்வி இயக்குநர் (ஆங்கிலம்) பி.எம்.வீரசூரியா, உதவி இயக்குநர் பீ.பீ.கே.எம் விஜேரத்ன மற்றும் உதவிக் கல்வி இயக்குநர் கே.கே.ஏ.எஸ்.விக்ரமசிங்க போன்றவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

# மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவேன்

## அறிவிப்பை விடுத்தார் அனுஷா!

**எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன் என்று மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான அமரர் சந்திரசேகரனின் புதல்வி சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.**

**இணையவழி கலந்துரையாடலொன்றின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.**

**அத்துடன், தனித்துப் போட்டியிடுவதா அல்லது கூட்டணி அமைத்து போட்டியிடுவதா என்பது தொடர்பில் அப்போதைய அரசியல் களநிலைவரத்தை அடிப்படையாகக்கொண்டே முடிவெடுக்கப்படும் எனவும் அனுஷா சந்திரசேகரன் சுட்டிக்காட்டினார்.**

**அதேபோல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தனித்துவத்தை நிரூபித்துவிட்டோம் எனவும், இனிதான் வெற்றிப்பயணம் ஆரம்பமாகும் எனவும் அனுசா சந்திரசேகரன் குறிப்பிட்டார்.**

# சேற்று நீரைப் பருகும் கஹவத்த கலல்எல்ல மக்கள்: குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத்தருமாறு கோரிக்கை





(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டம் கஹவத்த கலல் எல்ல தோட்ட மக்கள் பல வருடங்களாக குடிநீர் வசதியின்றி சேற்று நீரை குடித்து வருவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கஹவத்த கலல் எல்ல தோட்டத்தில் 300 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500இற்கும் மேற்பட்டோர் வாழ்ந்துவருகின்றனர். அத்தோட்ட நிர்வாகம் அப்பிரதேச இறப்பர் தோட்டத்திலுள்ள ஊற்றுநீரை அணைகட்டி, நீர்த்தாங்கி ஒன்றில் சேமித்துவைத்து அத்தோட்ட மக்களுக்கு வாராந்தம் இரண்டு நாட்களுக்கு மாத்திரம் வழங்குகின்றனர்.

இது விடயமாக பிரதேச மக்கள் தெரிவிக்கையில்,

அன்றாட பாவனைக்கு வழங்கும் நீர் காலையில் ஒரு மணித்தியாலத்துக்கும் மாலையில் ஒரு மணித்தியாலத்துக்கும் மாத்திரமே வழங்கப்படுகிறது. அவ்வாறு வழங்கப்படும் நீர் போதுமானதாகவும் சுத்தமானதாகவும் இல்லை. ஊற்றுநீரை அணைக்கட்டி வைத்திருக்கும் இடத்துக்கு மழை காலத்திற்கு மழைநீர் சேர்வதால் இறப்பர் தோட்டத்திலிருக்கும் இறந்த மிருகங்கள், பாம்புகள் போன்றன நீருடன் கலந்து குழாய்களினூடாக வருவதுடன், அப்படி வரும் அசுத்த நீரை பருகுவதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

மழை காலத்துக்கு குடிநீர் இல்லாமல் போவதுடன், வேறு ஊர்களுக்குச் சென்று குடிநீரை காசு கொடுத்து வாங்கி வரவேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது. அன்றாட பாவனைக்காக தோட்ட நிர்வாகத்தால் வழங்கப்படும் நீரில் பாடசாலை செல்லும் மாணவ, மாணவிகளின் பாடசாலை ஆடைகளை சுத்தம் செய்த பின் ஆடைகளின் நிறம் மாறி விடுவதால் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

தோட்ட நிர்வாகத்தினால் அன்றாடம் வழங்கப்படும் நீர், வீடுகளிலுள்ள குழாய்களில் ஒரு அடி உயரத்திற்குக்கூட வருவதில்லை என்றும் நீரை பிடிப்பதற்காக குழாய்கள் அருகில் இரண்டு, மூன்று அடி ஆழமான குழிகள் தோண்டி நீரை பெற்றுக்கொள்கின்றோம்" – எனத் தெரிவித்தனர்.

எனவே, உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி, குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்திசெய்து தருமாறு அத்தோட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நுவரெலியா மாவட்டத்தில் கரப்பந்தாட்ட அரங்கமொன்றை அமைக்க இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சுக்கு பிரதமர் பணிப்புரை

**(மஸ்கெலியா)**

**நுவரெலியா மாவட்ட இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் இணைப்பாளர் யு.தங்கவேல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளக கரப்பந்தாட்ட அரங்கொன்றை அமைத்துத் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**அதற்கிணங்க பிரதமரின் உத்தரவின்பேரில் பிரதமரின் செயலாளரால், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு குறித்த விளையாட்டரங்கம் தொடர்பான வேலைத்திட்டத்தை முன்வந்து செய்து தருமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.**

**நுவரெலியா மாவட்டத்திலுள்ள சினிசிட்டா விளையாட்டரங்கில் இவ்வாறான கரப்பந்தாட்ட மைதானம் காணப்பட்டபோதிலும் அதனை பூப்பந்தாட்ட மைதானமாக மாற்றியமைத்ததால், உள்ளக கரப்பந்தாட்டங்கள் நடத்த முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கது.**




# அக்குறணை பொதுச் சந்தை கட்டிடத்தை புனரமைக்க இஸ்திகார் இமாதுதீன் இணக்கம்



(கண்டி)

அக்குறணை பொதுச்சந்தைக் கட்டிடத்தில் வாடகைக்கு விடப்பட்டுள்ள கடைகளின் புறத்தோற்றத்தை மெருகூட்டிக் கொடுப்பதுடன், சந்தைக் கட்டிடத்துக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் அக்குறணை பிரதேச சபைத் தலைவர் இஸ்திகார் இமாதுதீன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் புதிய சுற்றுநிருப விதிமுறைகளுக்கமைய அக்குறணை சந்தை கட்டிடத்தின் கடைகளுக்குரிய புதிய வாடகை ஒப்பந்தம் கைச்சாத்திடும் முகமாக அக்குறணை பிரதேச சபையில் ஒழுங்குசெய்யப்பட்ட வைபவமொன்றின்போது இவ்விணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வாடகைக் கடைகளில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி பொது வர்த்தக நிலையத்தை நிர்வகித்தல் மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல், திண்மக் கழிவகற்றல், போன்றவற்றை முறையாக செயற்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் அங்கு தெரிவித்தார்.

# பன்விலயில் ஏலக்காய் திருடிய நால்வர் கைது!

**(கண்டி)**

**பன்வில பொலிஸ் பிரிவிலுள்ள கெலே பொக்க அரச பெருந்தோட்டத்தில் ஏலக்காய் களவாடியதாக சந்தேகிக்கப்படும் நால்வரை பன்வில பொலிஸார் கைதுசெய்தனர்.**

**கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை தெல்தெனிய நீதவான் சானக கலன்சூரிய முன் ஆஜர்செய்ததுடன், நால்வரும் தலா ஒரு இலட்ச ரூபா வீதம் 4 இலட்ச ரூபா சரீரப் பிணையில் விடுதலைசெய்யப்பட்டனர்.**

**மேற்படி சந்தேகநபர்கள் கெலேபொக்க அரச பெருந்தோட்டத்தில் ஏலக்காய் செய்கைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் பிரவேசித்து ஏலக்காய்களை திருடியுள்ளனர். அவற்றின் நிறை 20 கிலோ எனத் தெரியவருகிறது. அதனை பங்கீடு செய்வதில் அவர்களிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது அவர்களுக்கிடையில் மோதலாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.**

**பன்வில பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.**

# வாக்குச்சாவடியிலிருந்து திருடப்பட்ட தண்ணீர் வடிகட்டி

(மஸ்கெலியா)

மஸ்கெலியாவில் வாக்குச்சாவடியொன்றிலிருந்து ஒரு தற்காலிக நீர் வடிகட்டியொன்று (WATER FILTER) வாக்குச்சாவடியின் பொறுப்பதிகாரியால் திருடப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பிறகு அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

அக்கரப்பத்தனை பகுதியைச் சேர்ந்த ஒரு அதிபரால் தண்ணீர் வடிகட்டி எடுத்துச் செல்லப்பட்டது. இந்தச் சம்பவம் இந்த மாதம் 5 ஆம் திகதி அம்பகமுவ பிரதேச செயலக பகுதியின் மஸ்கெலியா பிரௌன்சுவிக் கிராம நிலதாரி பிரிவிலுள்ள ப்ளூம்ஃபீல்ட் தமிழ் கல்லூரி வாக்குச் சாவடியில் நடந்தது. வாக்குச் சாவடியை ஒருங்கிணைக்கும் பொறுப்பிலுள்ள கிராம சேவகர் அருகிலுள்ள வீட்டிலிருந்து தண்ணீர் வடிகட்டியைக் கொண்டுவந்து தேர்தல் நாளுக்காகப் பயன்படுத்தினார். தேர்தல் முடிந்ததும் தண்ணீர் வடிப்பான் இல்லை என்பது கிராமசேவகருக்கு தெரிந்தவுடன், வாக்குச் சாவடியில் கடமையிலிருந்த ஒரு தொழிலாளியிடம் விசாரித்து, வாக்குப்பதிவு நிலையத்தின் பொறுப்பான அதிகாரியால் தண்ணீர் வடிகட்டி எடுத்துச்செல்லப்பட்டதாக அறிந்துகொண்டார்.

கிராம சேவகர் நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையரிடம் புகார் அளித்துள்ளார். விசாரணையின்போது, ப்ளூம்ஃபீல்ட் வாக்குச்சாவடிக்குப் பொறுப்பான அதிகாரி தனக்குத் தெரிவிக்காமல் தண்ணீர் வடிகட்டியை எடுத்ததாக ஒப்புக்கொண்டார். அவர் செய்த தவறுக்கு அதிபர் மன்னிப்பு கோரியதோடு, நேற்று முன்தினம் கே.ஜி. குணதிலக்க, கிராம சேவகர், பிரௌன்சுவிக், மஸ்கெலியா அலுவலகத்தில் தண்ணீர் வடிகட்டியை உரிமையாளருக்கு ஒப்படைத்தார்.

இது தொடர்பாக சில அரச ஊழியர்களின் பொறுப்பற்ற மற்றும் அடிப்படை நடவடிக்கைகள் காரணமாக, கடினமாக உழைக்கும் நேர்மையான அதிகாரிகளும் சமூகத்தின் பார்வையில் குறைத்து மதிப்பிடப்படுகிறார்கள் என்று கிராம சேவகர் கே.ஜி.குணதிலக்க கூறினார்.

# 'தேயிலை சாயம்' புகைப்படக் கண்காட்சி



(தலவாக்கலை)

மலையக மண்வாசனை சொல்லும் மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்படக் கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை 23ஆம் திகதி தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.

'தேயிலை சாயம்' எனும் தொனிப்பொருளின்கீழ் நடைபெறும் இக்கண்காட்சியை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை பார்வையிடமுடியும் என நிகழ்வு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. மலையகத் தமிழர்களின் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும், வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையிலான புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் வலி சுமந்த வாழ்க்கையை எடுத்தியம்பும் புகைப்படங்களும் இதில் உள்ளன.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் மற்றும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் உட்பட இன்னும் பல முக்கியஸ்தர்களும், பொதுமக்களும் இக்கண்காட்சியை பார்வையிட்டனர்.











அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# சமூக – பொருளாதார தாக்கங்களை ஆராயும் வழிமுறையாக அரச நிர்வாக பொறிமுறையை மாற்றியமைக்க வேண்டும்

## நிர்வாக சேவைகள் சங்கத்திடம் பசில் ராஜபக்ஷ வலியுறுத்து



வேலைவாய்ப்பு உருவாக்கம், வருமானத்தை உயர்த்துதல், ஏற்றுமதி அதிகரிப்பு மற்றும் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு செயற்படுவதும் அதன்மூலம் கிடைக்கும் சமூக, பொருளாதார தாக்கங்களை ஆராயும் ஒரு வழிமுறையாக அரச நிர்வாக பொறிமுறையை மாற்றியமைக்க வேண்டும் - என்று பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷவுக்கும் இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது. இதன்போது, துல்லியமான தரவுகளையும் தகவல்களையும் ஒரே இடத்துக்கு கொண்டுவரவேண்டியதன் அவசியம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் பிரதீப் ரத்நாயக்க உள்ளிட்ட சங்கத்தின் அதிகாரிகள் குழுவினரும் கலந்துகொண்டனர்.

மேலும், பொதுமக்களின் பணத்தை செலவுசெய்து தயாரிக்கப்படும் தேர்தல் வாக்காளர் பட்டியல்களை பொதுச்சொத்தாக மாற்றுவது மற்றும் அதில் காணப்படும் சட்டசிக்கல்கள் தொடர்பிலும் நிர்வாக சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டியது.

விவசாயம், மீன்பிடி, சுற்றுலா, ஏற்றுமதி மேம்பாடு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விரைவாக நிலம் ஒதுக்கீடு உள்ளிட்ட பல துறைகளில் நிர்வாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய நிலையில், ஏற்றுமதித்துறையை மேம்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட ஐந்து பிரிவுகளினூடாக அந்திய முதலீட்டு வாய்ப்புகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்கு மாவட்ட மட்டத்தில் முதலீட்டாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் கட்டமைப்புகளின் அவசியம் குறித்தும் பசில் ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார்.

# பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் 'சமியா' உயிரிழப்பு!



சமிந்த







சமிந்த மறைந்திருந்த வீடு

பாதாள உலகக் குழுவின் தலைவராக கருதப்படும் அங்கொட லொக்காவின் குழுவைச் சேர்ந்த துப்பாக்கிதாரியான சமியா என்றழைக்கப்படும் சமிந்த எதிரிசூரிய என்பவர் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் கம்பஹா பொலிஸ் அதிகாரிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த முயற்சித்துள்ளார். இதன்போது பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட எதிர்த் தாக்குதலின்போதே அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறைகளில்தாய்மாருடன்வசித்துவரும் 46 குழந்தைகளை விடுவிக்க நடவடிக்கை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைகளுக்கமைய, சிறைச்சாலைகளிலுள்ள தாய்மாருடன் சிறையிலடைக்கப்படும் குழந்தைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது நாடுமுழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் 5 வயதுக்குட்பட்ட 46 குழந்தைகள் தங்கள் தாய்மாரின் பராமரிப்பில் இருக்கின்றனர் என பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலையிலுள்ள பெண்களுக்கு பிறந்த குழந்தைகள் மற்றும் பல்வேறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தாய்மாரின் பராமரிப்பிலுள்ள சிறு குழந்தைகள் பற்றிய ஊடக அறிக்கை தொடர்பில் பிரதமர் கவனம் செலுத்தியிருந்தார். இதனையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இவ்வாறு தாய்மாருடன் சிறையிலிருக்கும் குழந்தைகள் தொடர்பான தகவல்களைத் தேடிப்பார்த்துள்ளார். அதற்கமைய, குழந்தைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சிறைச்சாலை சீர்திருத்தங்களுக்கான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே பிரதமரின் ஊடக பிரிவுக்கு குழந்தைகள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும், குழந்தைகளை விடுவிப்பதற்கான செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும், இதுதொடர்பில் கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சிறைச்சாலை சீர்திருத்தங்களுக்கான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளேவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# மின்சாரத் தடங்கலுக்கு அமைச்சு காரணமென்றால் பதவி விலகத் தயார் என்கிறார் டலஸ் அழகப்பெரும



மின்சாரத் தடங்கலுக்கு மின்சக்தி அமைச்சே காரணம் என்றால், பதவி விலகத் தயார் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாட்டில் கடந்த வாரம் மின்சார விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டதை தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த நிலையில், குறித்த குழுவின் அறிக்கை நாளை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

அதற்கமைய, தான் 96 மணித்தியாலங்களே மின்சக்தி அமைச்சராக இருந்துள்ளதாகவும் மின்சக்தி அமைச்சே தவறுக்குக் காரணம் என்றால், செவ்வாய்க்கிழமையிலிருந்து மின்சக்தி அமைச்சுக்கு வேறு ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படுவார். அவ்வாறு புதிய அமைச்சரொருவர் நியமிக்கப்படுவாராக இருந்தால் அந்த சம்பவம் இலங்கையில் முதற்பதிவாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# 12 வயது – அதற்கு மேற்பட்டவர்கள் முகக்கவசங்கள் அணிவது அவசியம்!

## உலக சுகாதார அமைப்பு கோரிக்கை

கொரோனா தொற்று நோயின் பரவல் நிலை தீவிரமடையாமல் இருப்பதற்கு 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் கட்டாயமாக முகக்கவசங்களை அணியவேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இருப்பினும், ஆறு முதல் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறையில் முகக்கவசங்களை அணியவேண்டும் என்றும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. அந்தவகையில், 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிறுவர்கள் குறிப்பாக, மற்றவர்களிடமிருந்து சமூக இடைவெளியை கடைப்பிடிக்க முடியாத சந்தர்ப்பங்களில் கட்டாயம் முகக்கவசங்களை அணியவேண்டும் - என உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவுவதைக் குறைப்பதற்கு ஆதரவளிக்கும் வகையில் ஜூன் 5ஆம் திகதி முகக்கவசங்களை அணியுமாறு உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியிருந்தது. ஆயினும், சிறுவர்களுக்கான குறிப்பிட்ட வழிகாட்டுதலை வெளியிடவில்லை என்றும் அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஆண்டு சீனாவில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உலகளவில் 23 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 8 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

World Health Organization

# சிறைச்சாலை அறைகளை வாடகைக்கு விட்டு கைதிகளுக்கு ஹெரோயினும் விற்ற அதிகாரி!

சிறைவாசம் அனுபவித்துவரும் நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் கண்காணிப்பாளர் அனுருத்த சம்பாயோ, சிறைச்சாலை செல்களை கைதிகளுக்கு வாடகைக்கு விடுவதைபோல நடந்து கொண்ட அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

சம்பாயோ சிறைச்சாலை செல்களை 10,000 ரூபா தொடக்கம் 2,00,000 ரூபா வரை மாதாந்த கொடுப்பனவின் அடிப்படையில் வழங்கியுள்ளார். சொகுசு ஹோட்டல்களின் அறைகளை ஒத்ததாக அதிக கட்டணமுள்ள செல்கள் காணப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் கடந்தவாரம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீபா பீரிஸ் இந்த விடயங்களை வெளிப்படுத்தினார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பிற கைதிகளிடமிருந்து அவர் இந்த பணத்தைப் பெற்றுள்ளார்.

இந்தப் பணம் நீர்கொழும்பு சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை கண்காணிப்பாளர் அனுருத்த சம்பாயோ, தலைமை சிறைச்சாலை அதிகாரி சரத் உபாலி பண்டார, பதில் சிறைச்சாலை அதிகாரி நிஷாந்த சேனரத்ன மற்றும் இரண்டாம் நிலை அதிகாரி பிரசாத் கலிங்க கலுவாகல ஆகியோர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் சிறைச்சாலைக்குள் மோசடியான முறையில் ஹெரோயின் விற்பனையிலும் ஈடுபட்டதாக சட்டமா அதிபர் திணைக்களம் குற்றம்சாட்டியுள்ளது. அத்துடன், ஹெரோயினை அளவிடும் மின்தராசையும் வழங்கியுள்ளனர். குற்றப்புலனாய்வுத்துறையினர் நடத்திய சோதனையில் இவை மீட்கப்பட்டுள்ளன. சிறைச்சாலையின் எல் பிரிவிலேயே இவை வழங்கப்பட்டுள்ளன. அனுருத்த சம்பாயோவின் நேரடி கண்காணிப்பில் இவை நடந்துள்ளன.

200 கிலோகிராம் ஹெரோயின் கடத்தலில் சிக்கிய ஒருவரின் சிறைச்சாலை அறையில், குளிர்சாதனப் பெட்டி மற்றும் ரைஸ் குக்கர் என்பனவற்றை வைத்திருக்க சிறைக் கண்காணிப்பாளர் அனுமதித்த விடயம் ஏற்கனவே வெளியாகியிருந்தது. அந்த போதைப்பொருள் கடத்தல்காரர் நீரிழிவு நோயாளியென்பதால், அவருக்கு செலுத்தவேண்டிய இன்சுலின்களை வைத்திருக்க குளிர்சாதனப் பெட்டியை அனுமதித்ததாக சம்பாயோ வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

எனினும், அவருக்கு இன்சுலின் தேவையில்லையென சிறைச்சாலை வைத்தியர் சி.ஐ.டி.யினரிடம் தெரிவித்துள்ளார்.



கைதிகளை கையடக்கத் தொலைபேசி பாவனைக்கு அனுமதிப்பதன் மூலம் மாதாந்தம் 1,50,000 ரூபாவை அனுருத்த சம்பாயோ பணமீட்டியுள்ளார்.

கைதிகளுக்கு வழங்கப்பட்ட ஆடம்பர பொருட்களுக்கான கட்டணத்தை நன்கொடையாக பட்டியலிட சம்பாயோ உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை, நீர்கொழும்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறியபடி, சம்பாயோ குருநாகலில் வைத்து கைதுசெய்யப்படவில்லையென்பதையும் பிரதி சொலிசிட்டர் நாயகம் நீதிமன்றத்தில் தெரிவித்தார். நீதிமன்ற பிடியாணை பிரதியில்லாமல் குருநாகல் வரை எப்படி சென்று கைது செய்தார்கள் என்றும் கேள்வியெழுப்பினார்.

சம்பாயோ கைதுசெய்யப்பட்டதாக கூறப்பட்ட பின்னரும், நீர்கொழும்பு பொறுப்பதிகாரியும், சம்பாயோவும் ஒன்றாக தேநீர் அருந்தினார்கள் என்றும், ஒரே பாடசாலையில் இருவரும் ஒன்றாக கற்றதனால்தான் இந்த இணக்கப்பாடு உள்ளதா என்றும் கேள்வியெழுப்பினார்.

அத்துடன், அனுருத்த சம்பாயோ உள்ளிட்டவர்களின் பிணை மனுவை நிராகரிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை 4 அதிகாரிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.







விநாயகப் பெருமான் உற்சவ தினமான விநாயகர் சதுர்த்தி திருநாளை முன்னிட்டு விஷ்வ இந்து பரிஷத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி இறுதிநாள் வைபவத்தில் பல இந்து அமைப்புகள் கலந்துகொண்டு செட்டியார்தெரு முத்துவிநாயகர் ஆலயத்திலிருந்து காக்கைதீவு கடற்கரை நோக்கி புறப்பட்டுச்செல்வதையும் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்வுகளையும் காணலாம். (படங்கள்:- கொழும்பு வடக்கு நிருபர்)

# செய்தித் துளிகள்

10, 11, 12 மற்றும் 13ஆம் தர மாணவர்களுக்காக பிற்பகல் 3.30 வரை நடத்தப்படும் கல்வி நடவடிக்கைகளை செப்டெம்பர் முதலாம் திகதி முதல் மீண்டும் 7.30 முதல் 1.30 வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோகிராமுக்கான வரி 5 ரூபாவால் அதிகரிக்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

★★★★★★★★

கொள்ளுப்பிட்டியில் உயர் பாதுகாப்பு வலயத்தில் ட்ரோன் கெமரா ஒன்றை இயக்கிய சீனப் பிரஜையொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

★★★★★★★★

பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துட்டுகெமுனு மாவத்தையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 48 கிராம் 29 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

★★★★★★★★

மானெல்வத்த விகாராதிபதி கலாநிதி போதகம சந்திம தேரர் இடுகம கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு 10 மில்லியன் ரூபா நிதியை கையளித்தார்.







பேருவளை சீனன்கோட்டை அல்-ஹூமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி மற்றும் சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலை என்பவற்றின் எதிர்கால முன்னேற்றம் குறித்தும் இப்பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் குறித்தும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலை சந்தித்து கலந்துரையாடியதை படங்களில் காணலாம். (படங்கள்:- பேருவளை)

# இனவாதத்தைப் பேசினால்தான் வரவுள்ள காலங்களில் சாதிக்கலாமென சஜித் அணி எதிர்பார்க்கிறது !

## - அமீர் அலி கருத்து

இந்த அரசியல் சந்தையில் சிலர் அரிசி பேக்குகளையும், பணத்தையும் தூக்கித் திரிந்த வரலாற்றை நாங்கள் மறந்துவிட முடியாது - என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து ஓட்டமாவடியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

மட்டக்களப்பு மாவட்டம், கல்குடாவுக்கு யார் வந்தும் ஜனநாயக ரீதியில் அரசியல் செய்வதற்குத் தடையில்லை அது யாராக இருந்தாலும் பரவாயில்லை. தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் யாரும் வந்து ஜனநாயக அரசியலை முன்னெடுக்க முடியும்.

ஆனால், இந்த ஜனநாயக உரிமையை பணம் கொடுத்து, அரிசி பேக் கொடுத்து வாங்குவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. இருந்தும் அவ்விடயத்திலிருந்து யாரை எப்படி பாதுகாத்துக்கொள்வதென்ற சாணக்கியம் எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் சூட்சுமமாக அந்தப் பணியைச் செய்கிறார்கள்.

இரவு பொழுதுகளிலும், நடுநிசியிலும் எதிர்பார்க்காதவர்கள், நினைத்துப் பார்க்காதவர்கள் எல்லாம் அந்த மூடைகளை சுமந்து கல்குடாவை அரசியல் சந்தையாக மாற்றுகிறார்கள்.

இந்த விடயத்தில் எதிர்காலத்தில் கல்குடா சமூகம் மிகத் தெளிவாக இருந்துகொள்ள வேண்டும். கல்குடாவில் ஒரு பிரதிநிதித்துவம் வரக்கூடாது என்று சில அரசியல் முகவர்களுக்குத் தேவையாகவுள்ளது. ஏனென்றால், இந்தப் பிரதேசத்தில் ஒரு பிரதிநிதித்துவம் வருமாக இருந்தால் தங்களுடைய முகவர் வேலைகளை செய்ய முடியாது என்று அவர்கள் பார்க்கிறார்கள்.

ஒரு அரசியல் தலைமை இல்லாமல் இருந்தால்தான் தாங்கள் அதில் புகுந்து விளையாட முடியும், வெளியூர் அரசியல் வாதிகளை வைத்து இங்கு தொழில்செய்ய முடியும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள்.

நாங்கள் தேர்தல் காலங்களில் ராஜபக்ஷ அணியினர் 151 ஆசனங்களை எடுத்தால் என்ன நடக்கும் என்று கூறியிருந்தோம். இது ஒரு சுகமான நாடாளுமன்றம் அல்ல. இது ஒரு சுமையான நாடாளுமன்றம் என்பதை நாம் அப்போதே எடுத்துச் சொன்னோம். இப்போது அது சுகமா, சுமையா என்று அங்கு போயுள்ளவர்களுக்கும் தெரியும், அனுப்பியவர்களுக்கும் தெரியும் என்று துல்லியமாக கூற முடியும்.

எனவே, வரவுள்ள அரசியல் நிகழ்வுகள் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஓர் அதிர்வு தரப்போகின்ற அரசியலாக இருக்கும் என்பதை என்னால் சொல்லமுடியும். 151ஐ தாண்டியது என்பது சிறுபான்மைச் சமூகத்துடைய கழுத்துகளுக்கு நீட்டப்பட்டுள்ள அரிவாள் என்பதை நீங்கள் யாரும் மறந்துவிடக்கூடாது .

மத ரீதியான சிந்தனைகளை மேலோங்கி உலக அரசியலில் இப்போது பேசப்பட்டுக் கொண்டிருக்கும் விடயம் முஸ்லிம்களை மையப்பொருளாக்கி அவர்களை ஒரு கேவலம் கெட்ட சமூகமாக்கி, அவர்கள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்று சொல்லித்தான் முழு உலகத்திலும் அரசியல் மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளார்கள்.

அதே மாற்றம்தான் இலங்கையிலும் நடந்தேறியது. அதன்மூலம் கிடைத்த பிரதிபலனாகத்தான் 151 ஆசனங்களைப் பெற்றுள்ளனர். எனவே, இந்த நிகழ்ச்சி நிரல் கோட்டாபாய ராஜபக்ஷவினது மாத்திரம் என்றோ அரசாங்கத்தினது மாத்திரமென்றோ நீங்கள் நினைத்துவிடாதீர்கள். சஜித் பிரேமதாஸவுடைய காலத்திலும் இதை பேசவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைமை சஜித் அணிக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இவ்விடத்தில் நான் சொல்லவேண்டும். அவர்களும் இனவாதத்தைப் பேசினால்தான் வரவுள்ள காலங்களில் எதையாவது சாதிக்க முடியும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் - என்றார்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஐ.ரீ.அஸ்மி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்த பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் முகமாக கல்முனை பீகாஸ் கல்வி வளாகம் மற்றும் ஏ.ஜே.எம். பிரதர்ஸ் உடன் இணைந்து ஏற்பாடுசெய்த "இரத்ததானம் செய்வோம் உயிர்களைக் காப்போம்" எனும் தொனிப்பொருளிலான இரத்ததான முகாம், கல்முனை பீகாஸ் வளாக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது பீகாஸ் கல்முனை வளாக ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இரத்ததானம் வழங்கியதை படங்களில் காணலாம். (படங்கள் : கல்முனை)

# ஓட்டமாவடி பிரதேச முக்கியஸ்தர்கள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனுடன் கொழும்பில் சந்திப்பு

(ஓட்டமாவடி )

ஓட்டமாவடி பிரதேச முக்கியஸ்தர்களில் சிலர் அண்மையில் வெகுஜன ஊடக மற்றும் தபால்துறை இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனுடன் அவரது அமைச்சின் காரியாலயத்தில் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர்.



பொதுஜன பெரமுன கட்சியினூடாக போட்டியிட்டு வெற்றியீட்டிய வியாழேந்திரனுக்கு பாராட்டுத் தெரிவிக்கும் முகமாகவும், எதிர்காலத்தில் அவரோடு இணைந்து பிரதேசத்திற்கு பணியாற்றவேண்டும் என்ற நன்நோக்கின் அடிப்படையிலும் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி- காவத்தமுனை பிரதேச பொதுஜன பெரமுன கட்சி அமைப்பாளர் சியாம் ஹாபிழ் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், வாழைச்சேனை பிரதேச பொதுஜன பெரமுன வேட்பாளர் சிம்சான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

காவத்தமுனை பிரதேசத்தின் மீன்பிடித் தொழிலை மேம்படுத்தல் மற்றும் வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், இளைஞர்களுக்கான தொழில்வாய்ப்பு உள்ளிட்ட பல விடயங்கள் இங்கு அமைச்சருடன் கலந்துரையாடப்பட்டதாக முக்கியஸ்தர்கள் மேலும் தெரிவித்தனர்.

# வாள்வெட்டுச் சம்பவத்தில் 15 வயது மாணவன் பலி!

(செங்கலடி)

மட்டக்களப்பு கொம்மாதுறைப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் மாணவனொருவன் பலியானதுடன், அவரது உறவினர் இருவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

செங்கலடி பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் கல்வி பயிலும் செங்கலடி மற்றும் கொம்மாதுறை பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களிடையே கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட மோதலிலேயே செங்கலடியைச் சேர்ந்த மேற்படி மாணவன் காயமடைந்திருந்தார்.

இது தொடர்பாக காயமடைந்த மாணவனின் உறவினர்கள் தாக்குதலை மேற்கொண்ட கொம்மாதுறை விநாயகர் வீதியிலுள்ள சம்பந்தப்பட்ட மாணவனின் வீட்டுக்கு ச் சென்று மாணவர்களிடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாக பேசிக்கொண்டிருந்தபோது அவ்வேளை ஏற்பட்ட கருத்து மோதல் வலுபெற்றதிலேயே குறித்த வாள்வெட்டு நிகழ்ந்துள்ளது.



வாள் வெட்டுக்குள்ளான செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த மாணவன் ரமணன் திவ்வியராஜ் (வயது 14) சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், அவரது உறவினர்களான இருவரும் வெட்டுக்காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் சம்பவ இடத்துக்கு நேரடியாக சென்று விசாரனைகளை மேற்கொண்டதுடன், மாணவனின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் காயங்களுக்குள்ளானவர்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதித்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தப்பிச்சென்றுள்ளதுடன், கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக கருதப்படும் வாள், ஏறாவூர் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

மேலதிக விசாரனைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# இராணுவத்தினருக்கு பிளாஸ்ரிக் குப்பைத்தொட்டிகள் அன்பளிப்பு

(ஓட்டமாவடி )

பிரதேச பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் இராணுவத்தினரின் நன்மை கருதி ஓட்டமாவடி பிரதேச சபையால் திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைகளை இலகுபடுத்தும் நோக்கில் பிரதேச இராணுவத்தினருக்கு குப்பைத்தொட்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளரின் வேண்டுகோளின்பேரில் ஓட்டமாவடி பிரதேச சபைக்கு இராணுவத்தினர் வருகை தந்தபோதே ஓட்டமாவடி பிரதேச தவிசாளர் ஏ.எம்.நௌபரினால் மேற்படி பிளாஸ்ரிக் குப்பைத்தொட்டிகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சபையின் செயலாளர் சிஹாப்தீனும் பங்கேற்றுக்கொண்டார்.



# வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் வசதி

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு மாதங்களாக ஏற்பட்டுள்ள கடுமையான வெப்ப காலநிலையால் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த 31 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதனால் 2,000இற்கும் மேற்பட்டவர்கள் நீரின்றி வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கனியின் ஆலோசனைக்கமைய குழாய் நீர் இல்லாத பிரதேசங்களிலுள்ள குடும்பங்களுக்கு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினூடாக குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

விவசாயிகள், நன்னீர் மீன் வளர்ப்பாளர்கள், கால்நடை வளர்ப்பாளர்கள் ஆகியோர் இவ்வாறு அதிகளவாக வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலக, தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மு.அ.முகம்மது றஸ்மி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் குடிநீரின்றி பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வை.எம்.எம்.ஏ. பேரவையின்

# அம்பாறை மாவட்ட பணிப்பாளராக சுபைர் மீண்டும் தெரிவானார்



(அம்பாறை)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளராக கே.எல்.சுபைர் தொடர்ந்து 7ஆவது முறையாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வை.எம்.எம்.ஏ. பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளராக செயற்பட்ட கே.எல்.சுபையிர் தனக்குரிய சேவைப் பணியை எவ்வித பாரபட்சமுமின்றி மிகவும் சிறப்பாக செய்து வந்துள்ளமையால் அனைத்துத் தலைவர்களும் விரும்பத்தக்க ஒரு பணிப்பாளராக இவர் தெரிவானதுடன், அம்பாறை மாவட்டம் முழுவதும் மிக நேர்த்தியாக தனது பணியை செய்துவந்தவர் என்ற நற்பெயரையும் இவர் பெற்றிருந்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து பேரவை கிளைகளின் சேவை வேலைத் திட்டங்களுக்கும், புதிய கிளைகளின் உருவாக்கத்திற்கும் இவர் அயராது பாடுபட்டவராவார். அத்துடன், அனைத்துக் கிளைகளின் நன்மதிப்பையும் இவர் பெற்றிருந்தார்.

கே.எல்.சுபைர் தனது சமூகசேவையை சென்றல் கேம்ப் கிளையில் ஆரம்பித்து அதன் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியதுடன், கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பேரவையின் தலைமைப்பீடத்துக்குள் உள்வாங்கப்பட்ட நிலையில் 7ஆவது தடவையாகவும் அம்பாறை மாவட்ட பணிப்பாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காக்காச்சிவட்டையில் பயிர்ச் சிகிச்சை முகாம்

(பாண்டிருப்பு)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் காக்காச்சிவட்டை விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள விளாவெட்டுவான் கிராமத்தில் பயிர்ச் சிகிச்சை முகாம் காக்காச்சிவட்டை விவசாயப் போதனாசிரியர் டி.குகசோதி தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் அதிதியாக தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் டி.மேகராசா கலந்துகொண்டார்.

அத்துடன், விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான கிலசன், லியிந்தன், கிராமசேவை உத்தியோகத்தர், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு விவசாயிகள் கொண்டுவந்திருந்த நோய்பீடைத் தாக்கத்திற்குள்ளான பயிர்களின் மாதிரிகள் அவதானிக்கப்பட்டு அந்நோய் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும், விவசாயிகளிடம் விவசாயம்சார்ந்த ஏனைய பிரச்சினைகள் கேட்டறியப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் அதிகாரிகளால் வழங்கப்பட்டது. தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜாவின் வழிகாட்டலில் விவசாய கிராமங்கள்தோறும் இவ்வாறான விவசாய பயிர்ச் சிகிச்சை முகாம்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாமிய புது வருடத்தை முன்னிட்டு மார்க்க சொற்பொழிவு

(அக்கரைப்பற்று)

இஸ்லாமிய புது வருடத்தை (முஹர்ரம் மாதம்) வரவேற்கும் முகமாக அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயம் ஏற்பாடு செய்த விசேட நிகழ்வும், மார்க்க சொற்பொழிவும் கல்லூரியின் அதிபர் எம்.எஸ்.எம்.அஸ்லம் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமையன்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் தலைமை உரையை பாடசாலை முதல்வர் ஆற்றியதுடன், புனித முஹர்ரம் மாதம் சம்பந்தமான விசேட உரையை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் ஏ.எல்.எம்.அஷ்ரப் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# உலகளாவிய ரீதியில் காரைதீவு மண்ணுக்கு பெருமை சேர்த்தவர் விபுலானந்த அடிகளார்

## சமூக அமைப்பின் அலுவலக திறப்புவிழாவில் தவிசாளர் ஜெயசிறில்

( பாண்டிருப்பு)

சமூக நல சிந்தனையுள்ள பலரையும் ஒன்றிணைத்து பல்வேறுபட்ட சமூகப் பணிகளை ஆற்றி வரும் காரைதீவு அபிவிருத்தி திட்டமிடல் சமூக அமைப்பின் அலுவலகத் திறப்பு விழாகடந்த சனிக்கிழமைமாலை அமைப்பின் தலைவர் ப.இராஜ மோகன் தலைமையில் சிவபதி இல்லத்தில் இடம்பெற்றது. முதன்மை அதிதியாக அழைக்கப்பட்ட காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ஆகியோரால் அங்கு நிறுவப்பட்ட பெயர்ப்பலகை, டொக்டர் பரசுராமன் நூலகம், அலுவலகம் என்பன திறந்து வைக்கப்பட்டன.



அங்கு உரையாற்றிய பிரதேச சபை தவிசாளர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் உலகின் முதல் தமிழ் பேராசானாக இருந்தது மட்டுமல்ல, தமிழுக்காக தன்னை அர்ப்பணித்து இந்த அகிலம் முழுவதும் தடம்பதித்திருக்கிறார். குறிப்பாக, நான் தஞ்சைப் பெருங் கோயிலில் நூறாவது ஆண்டு நிகழ்வுக்கு அழைக்கப்பட்டு சென்றவேளை தவிசாளர் என்பதை விட இந்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணிலிருந்து வந்ததற்காக எனக்கு ஒரு தனி கௌரவம் அங்கு வழங்கப்பட்டது.

அதனை இந்த ஊர் மக்களுக்கு கிடைத்த பெருமையாகவே என்னால் உணர முடிந்தது. நாங்கள் எங்களுக்குள் சொல்வதை விட ஏனைய நாடுகளில் இருக்கின்றவர்கள் இந்த உத்தமரை என்றும் நேசித்து கொண்டிருக் கின்றார்கள். அதனடிப்படையில் கடந்த வரலாறுகளும் எதிர்கால தூரநோக்கும் இல்லாதவர்கள் சரியான பாதையில் பயணிக்க முடியாது என்று கூறுவார்கள். இந்த கிராமத்து இரண்டு கண்களாக திகழ்ந்த டொக்டர் பரசு ராமன், விநாயகமூர்த்தி ஆகியோர் இந்த மண்ணுக்காக தூர நோக்கு சிந்தனையுடன் பல்வேறுபட்ட சேவைகளை செய்திருக்கின்றார்கள். அதைப் போன்று பல சமூகப் பணிகளையும் ஒற்றுமையாக நின்று செய்துவரும் இந்த அமைப்பு இன்று ஒரு வாசிக சாலையைத் திறந்துவைத்து பிரதேச சபை செய்யவேண்டிய பணியை செய்திருக்கின்றனர். அவர்களின் இவ்வாறான தூரநோக்கு சிந்தனைக்கு நான் தலைவணங்குகிறேன் எனத் தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன்,

ஒற்றுமையை நாங்கள் ஏற்படுத்துவதற்கு ஒரு அடையாளம் முக்கியமானது. அவ்வாறான அடையாளத்திற்கு கீழான ஒற்றுமைப்படுத்தல்கள் சில இடங்களில் சாதகமாகவும் சாத்தியமாகவும் நடைபெற்றிருக் கின்றது. இந்தியாவின் தேசபிதாவாகவும் அகிம்சை வழியின் முன்னோடியாகவும் கருதப்படுகின்ற மகாத்மா காந்தியை அந்தநாடு ஒட்டுமொத்தமாக ஒரு தேச பிதாவாகப் பார்க்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கும் இந்தியா ஒற்றுமையாக இருந்து வருகின்றது.

அதேபோல் இந்தியக் கொடியில் இருக்கின்ற அசோக சக்கரத்தை அசோகனுடைய அடையாளமாகப் பார்க்கின்றவர்கள் இருக்கின்றார்கள். சிலவேளைகளில் பௌத்த மதத்தின் அடையாளமாக பார்க்கின்றவர்களும் இருக்கின்றார்கள். இருந்தாலும் மிக சிறியளவிலே பௌத்தத்தைக் கொண்டிருக்கும் அந்த இந்திய நாடு இன்றைக்கும் அதனை ஒரு அடையாளமாக வைத்துத்தான் ஒற்றுமையாக இருக்கிறது. அதேபோல் ஒற்றுமைப் படுத்தலில் உலகளாவிய ரீதியிலே எங்களை ஒருங்கிணைத்திருக்கின்ற எங்களு டைய மண்ணுக்குப் பெருமை சேர்த்தமை முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளைச் சாரும். அவருக்குக் கீழேதான் இந்த காரைதீவுக்கு முக்கியமான ஒரு அடையாளம் கிடைத்திருக்கின்றது. அவ்வாறான ஓர் அடையாளத்தை மீண்டும் மீண்டும் ஏற்படுத்துகின்ற ஒரு முயற்சியாகத்தான் இந்த காரைதீவு அபிவிருத்தித் திட்டமிடல் சமூக அமைப்பை நான் பார்க்கின்றேன். எனவே, விலகிப் போன உறவுகளையும் தூரச் சென்ற அமைப்புகளையும் ஒன்றிணைக் கின்ற ஒரு முக்கிய புள்ளியாக இன்று இந்த காரைதீவு அபிவிருத்தி பொருளாதார சமூகம் தனது பயணத்தை ஆரம்பிக்கின்றது - என்றார்.




# மருதமுனை கடற்கரை வீதி 'காப்பட்'வீதியாக புனரமைப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஒரு இலட்சம் கிலோமீற்றர் தூர காப்பட் வீதிகளை அபிவிருத்தி செய்யும் விசேட வேலைத்திட்டத்துக்கமைய மருதமுனை கடற்கரை பிரதான வீதியை காப்பட் வீதியாக அபிவிருத்திசெய்வதற்கான ஆரம்பப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

பாண்டிருப்பு தொடக்கம் பெரியநீலாவணை வரைக்குமான சுமார் 1820 மீற்றர் நீளம் கொண்ட நவீன காப்பட் வீதியாக இந்த கடற்கரை பிரதான வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.





வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாண மேலதிக பணிப்பாளர் பொறியியலாளர் ஐ.எல்.அமீனுல் பாரி வீதி செப்பனிடும் கனரக இயந்திரத்தையொட்டி இப்பணிகளை ஆரம்பித்துவைத்தார்.

பொதுமக்களின் நீண்டகால தேவையாக இருந்துவந்த இந்த வீதி புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கும் அதிகாரிகளுக்கும் உலமாக்கள் பிராத்தனை செய்ததுடன் வாழ்த்துகளையும் தெரிவித்தனர்.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் முற்றாக அழிந்துபோன மருதமுனை கடற்கரை வீதி கடந்த 16 வருடங்களாக குன்றும் குழியுமாகவே காணப்பட்டதுடன், மழை காலங்களில் இவ்வீதியுடாக பயணிப்பது பெரும் சிரமமாகவும் இருந்துவந்தது. கிரவல் புழுதியோடு பயணித்த மக்களுக்கு தற்போது ஜனாதிபதியின் இந்த காப்பட் வீதி அமைத்தல் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி ஆரம்ப நிகழ்வில் மருதமுனை அனைத்து பள்ளிவாசல்களின் தலைவர் அஸ்செய்க் எம்.ஐ.குசைனுத்தீன் உட்பட உலமாக்கள், கல்விமான்கள், ஊர் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பெரியநீலாவணையில்

# 'சௌபாக்கியா' வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய பண்ணையாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கிவைப்பு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய விவசாயிகளை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

"சௌபாக்கியா" தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய திணைக்களத்தின் விவசாய விரிவாக்கல் பிரிவின் (மத்திய) ஊடாக அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை கிராமத்தில் சிறந்த விவசாய நடைமுறை அலகின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட விவசாய பண்ணையாளர்களுக்கு உபகரணங்களை இலவசமாக வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமையன்று பொரியநீலாவணை கமநல சேவை மத்திய நிலையத்தில் நடைபெற்றது.







பெரியநீலாவணை விவசாய விரிவாக்கல் மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி ஏ.எல்.எம்.சமீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட விவசாய திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ.சனீர், உதவிப் பணிப்பாளர் ஜெகத் வணசிங்க, விவசாய வியாபார ஆலோசகர் எம்.எம்.எம்.ஜெமீல் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

தேசிய உணவுத் தேவையை பூர்த்திசெய்வதில் விவசாயிகளின் பங்களிப்பு மற்றும் சிறுபோகத்தில் செய்கை பண்ணக்கூடிய மிளகாய், சோயா, பாசிப்பயறு, குரக்கன், நிலக்கடலை, சோளம், உழுந்து போன்ற பயிரினங்களை உற்பத்திசெய்வதன் அவசியம் பற்றியும் அதிகாரிகள் விளக்கமளித்தனர். சிறு வீட்டுத் தோட்ட உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பயிர்க் கன்றுகளும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

## மட்டக்களப்பு - கல்லடி

# புனித இஞ்ஞாசியார் ஆலய 104ஆவது வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி – டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 104ஆவது வருடாந்த திருவிழா பங்குத்தந்தை சுவக்கின் றொசான் அடிகளார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.





முதல் நாள் திருப்பலியை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை ஒப்புக்கொடுத்ததுடன், 38 சிறுவர்களுக்கு ஆயரினால் முதல் நன்மை உறுதிப் பூசுதல் எனும் அருட்சாதனங்கள் வழங்கப்பட்டன.

ஆலயத் திருவிழாவின் எட்டு நாட்கள் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும், பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளன.

கொவிட் -19 சூழ்நிலையை கருத்திற்கொண்டு சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நடைபெறும் இத்திருவிழாவில் புனிதரின் திருவுருவப்பவனி இம்முறை இடம்பெறாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் இறுதிநாளான 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ.தேவதாசன் அடிகளார் தலைமையில் பெருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருவிழா நிறைவுபெறவுள்ளது.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கொரோனா பி.சி.ஆர். பரிசோதனை





கொரோனா வைரஸ் சமூக மட்டத்தில் பரம்பலடைவதை தடுப்பதற்கான பரிசோதனைகள் நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் வழிகாட்டல்களுக்கமைய நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொடர்பில் பி.சி.ஆர். (PCR) பரிசோதனை மாதிரிகள் செயலக வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் உதவிப் பிரதேச செயலாளர் என்.நவனீதராஜா, நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஜே.மதன் மற்றும் பொதுச் சுகாதார அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் பங்குபற்றினர்.





காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

# சீத்துவக்கேடு 55

உதைவிட உனக்கு இன்னொரு விசயம் தெரியுமே

"கள்ளடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய இருக்கையில்
எண்கு தன்பிணவோடு இருந்து போல"

எண்டு நாகர் கூடிக் குழுமியிருந்த இடத்தில் கள்ளைக் காய்ச்சும் பானைகள் இருந்ததாக மணிமேகலையில சாத்தனார் சொல்லுறார்.

அதுமட்டுமே ஆண் – பெண் புணர்ச்சியின் போது ஆம்பிளை பொம்பிளை ரெண்டுபேரும் காம பானம் எண்ட கள்ளைக் குடிச்சவை எண்டும் போருக்குப் போகேக்கை வீரர்கள் தளபதிகள் எல்லாம் வீரபானம் எண்ட கள்ளைக் குடிச்சவை எண்டும் புத்தகங்களிலை கிடக்குது கண்டியோ. பூக்கமழ் தேறல், மணங்கமழ் தேறல் எண்டு சொல்லுற ரெண்டுவகையையும் காமபானமாக எங்கட ஆக்கள் குடிச்சவை எண்ட செய்தி இலக்கியங்களில கிடக்குது கண்டியோ.

பொம்பிளையள் காமபானம் குடிச்ச செய்தியை பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார்

"துணைப் புணர்ந்த மட மங்கையர்
பட்டு நீக்கித் துகில் உடுத்தும்,
மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்'' எண்டும்,

அதேமாதிரி பரிபாடல் மண்மிசைஅவிழில் செவ்வேள் எண்ட புலவர்

"மாரண் ஒப்பார் மார்பு அணி கலவி
அரிவையர் அமிர்த பானம்
உரிமை மாக்கள் உவகை அமிர்து உய்ப்ப"

எண்டும்,

புறநானூறில தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை வாழ்த்தி மாங்குடி மருதனார் பாடேக்கை

"ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்நிய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகு மதி" எண்டும்

சொல்லுகினம் கண்டியோ எண்டுவார் அப்பு.

பரிபாடலில் பாலைக்கலியில் பெருங்கொடுங்கோன் எண்ட புலவர்

"முள் உறழ் முளை எயிற்று அமிழ்து
ஊறும் தீ நீரைக்
கள்ளினும் மகிழ் செயும் என
உரைத்தும் அமையார்" எண்டு

அமிர்தபானம் எண்ட ஒரு வகைக் கள்ளை ஆம்பிளை பொம்பிளை எல்லாரும் ஒண்டா இருந்து காமபானம் மாதிரிக் குடிச்சவை எண்ட செய்தியைச் சொல்லுறார்.

ஐயனாரிதனார் எண்ட புலவர் புறப்பொருள் வெண்பாமாலையில்

"ஒன்னா முனையோர்க்கு ஒழிக இனித்துயில்
மன்னன் மறவர் மகிழ்தூங்கா – முன்னே
படலைக் குரம்பைப் பழங்கண் முதியாள்
விடலைக்கு வெங்கள் விடும்" எண்டு

எப்பிடி சண்டைக்குப் போறவை வீரபானம் எண்ட கள்ளைக் குடிச்சவை எண்ட விபரம் சொல்லுகிறார்.

கள்ளின்ரை சுவை களாப் பழத்தின் புளிப்பு மாதிரி சரியான புளிப்புச் சுவை எண்டதை "களவுப் புளியன்ன விளைகள்" ( புறம் 328)

எண்ட பாட்டிலும் "கள்நா றும்மே கானல்அம் தொண்டி" (புறம் 48) எண்டு பொய்கையாரும் ,"மணிக்கலன் நிறைந்த மணநாறு தேறல்" (புறம் 397) எண்டு எருக்காட்டூர்த் தாயங் கண்ணனாரும் "இளங்கள் கமழும் நெய்தல்அம் செறுவின்" எண்டு,

அகநானூறும் கள்ளின்ரை மணத்தைப் பற்றியும் சொல்லுது கண்டியோ எண்டு அப்பு சொல்லவும் உதுக்குப் பாட்டுத் தேவையே நீ ஏவறை விடேக்கையே உந்தப் புளிச்ச நாத்தம் வருகுதெல்லே எண்டு ஆச்சி மறுத்தான் குடுப்பா.

கள்ளின்ரை நிறத்தைப் பற்றி "செண்ணிகைக் கோதை கதுப்போடு இயல" எண்ட பரிபாடலும் "தசும்பு துளங்கு இருக்கை தீஞ்சோறு விளைந்த மணிநிற மட்டம்" எண்டு பதிற்றுப்பத்தும் சொல்லுது தெரியுமோ உனக்கு எண்டுவார் அப்பு.

உந்தக் கள்ளைக் குடிச்சா தேள் கொட்டினால் எப்பிடி நஞ்சு ஏறுமோ அதுபோல போதை ஏறும் எண்டு அவ்வையார் "தேட்கடுப்பு அன்ன நாட்படு தேறல்" எண்டு புறநாநூறிலை சொல்லுறார் .

பாம்பு கடிச்சா எப்பிடி விஷம் ஏறுமோ அப்பிடி கள்ளுக் குடிச்சா போதை ஏறும் எண்டு "கடுந் திறல் பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்" எண்டு மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார் அகநாநூறிலை சொல்லுறார் கண்டியோ எண்டுவார்.

பாம்பு படம் எடுத்தால் எப்பிடி அங்கயும் இஞ்சையும் தலை ஆடுமோ அதுமாதிரித்தான் கள்ளுக் குடிச்ச ஆக்களுக்கு தலை தன்ரை பாட்டுக்கு ஆடும் எண்ட செய்தியை "நன்றும் அரவுவெகுண் டன்ன தேறலொடு " எண்டு புறத்திணை நன்னாகனார் எண்ட புலவர் புறனாநூறிலை சொல்லுறார் கண்டியோ எண்டுவார் அப்பு.

*(தொடரும் )*

# பெய்ரூட் வெடிவிபத்து: கற்பிதங்கள், உண்மைகள் மற்றும் பாடங்கள்!





தொலைதூரத்திலிருந்து கேட்ட ஒரு பேரொலியிலிருந்துதான் எல்லாமே தொடங்கியது. லெபனானைச் சேர்ந்த பலரையும்போல எனது முதல் உள்ளுணர்வால் வானத்தை நோக்கி அண்ணாந்து பார்த்தேன். மருந்துக் கடையிலிருந்து வெளிவந்த நான் மேகங்களுக்கிடையில் உன்னிப்பாக பார்த்துக்கொண்டிருந்தேன். ஒரு இஸ்ரேலிய விமானத்தைப் பார்க்கப்போகிறேன் என்றே உறுதியாக நம்பினேன்.

இஸ்ரேலிய ஜெட் விமானங்களின் சத்தம் எனக்கு அத்துபடி. அச்சுறுத்தும் சத்தத்துடன் வரும் அந்த விமானங்களின் ஒலி காதைக் கிழிக்கும் வகையில் அதிகரித்து, பின்னர் சன்னமாகி மறைந்துவிடும். ஒவ்வொரு வருடமும் லெபனான் வான் எல்லையில் 1,000 தடவைக்கும் அதிகமாக அத்துமீறி நுழையும் அந்த விமானங்கள், லெபனானிலும் அண்டைநாடான சிரியாவிலும் இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கும் அல்லது சோதனை நடத்துவதான பாவனையில் இஸ்ரேல் விமானங்கள் தங்கள் பலத்தைப் பறைசாற்றிக்கொள்ள லெபனான் மீது பறந்து செல்லும்.

அண்ணாந்து பார்த்தபடி சில நிமிடங்கள் காத்திருந்தும் என் பார்வைக்கு எதுவும் தட்டுப்படவில்லை. எனவே, இயல்பாக எனது காரை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். திடீரென்று எனது சமநிலை குலைந்து தடுமாறினேன். காதைச் செவிடாக்கும் வகையில் வானமே இடிந்துவிட்டதைப் போலவும், நிலநடுக்கத்தால் பூமியே அதிர்ந்ததுபோலவும் இருந்தது. நாங்கள் ஏற்கனவே தாக்குதல்களுக்குள்ளான அனுபவம் கொண்டவர்கள் என்பதால், இப்போதும் தாக்குதல்தான் நடக்கிறது என்று நினைத்து, எனது காரில் தாவி ஏறி வேகமாகக் கிளம்பினேன்.

### அதிரும் நினைவுகள்

வீட்டை நோக்கி விரைந்துகொண்டிருந்த சமயத்தில், பழைய நினைவுகள் என் மனதில் தோன்றின. 2006இல் பதுங்குகுழிகளைத் தகர்க்கும் அமெரிக்கத் தயாரிப்புக் குண்டுகள் பெய்ரூட் நகரத்தைச் சின்னாபின்னப்படுத்திய நாளை நினைத்துக்கொண்டேன். அன்று பெய்ரூட்டிலும் அதன் புறநகர்களிலுமுள்ள ஒவ்வொரு கட்டிடமும் அதிர்ந்தது. 1996இன் ஒரு நாளில், இஸ்ரேல் ஜெட் விமானங்களிலிருந்து, அருகிலுள்ள மின் நிலையத்தின் மீது ஏவுகணைகள் சீறிப்பாய்ந்ததை எனது வீட்டு ஜன்னலிலிருந்து பார்த்த தருணத்தை நினைத்துக்கொண்டேன்.

2005இல் எனது அலுவலகத்துக்குச் சற்றுத் தொலைவில் முன்னாள் பிரதமரின் வாகன அணிவகுப்பில் ஒரு தொன் டி.என்.டி. வெடிபொருட்கள் வெடித்ததில் எனது அலுவலகக் கட்டிடமே அதிர்ந்த நாள் என் நினைவுக்கு வந்தது. இந்த முறை கரும்புகை வானத்தில் பரவத் தொடங்கியபோது, இப்போது என்ன நடந்திருக்கிறது என்று யோசித்துக்கொண்டிருந்தேன். ஏதாவது விபத்தாக மட்டுமே இருக்கும் எனும் நம்பிக்கையே என் மனதில் மீண்டும் மீண்டும் எழுந்தது.

வீட்டைச் சென்றடைந்தபோது, பயங்கரமான வெடிவிபத்து நிகழ்ந்து 10 நிமிடங்களுக்குப் பின்னரும் அதன் அதிர்வுகளை எனது எலும்புகளில் என்னால் உணரமுடிந்தது. செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம் என எனது செல்போனைக் கையில் எடுத்தேன்.

### ஆதாரமற்ற செய்திகள்

எனது ரைம்லைனில் முதலில் கண்ணில் பட்ட டுவீட் நம்பிக்கை தரும் வகையில் இல்லை. பெய்ரூட் துறைமுகத்திலும், முன்னாள் பிரதமர் சாத் ஹரிரியின் வீட்டுக்கு அருகிலுமாக இரண்டு குண்டுவெடிப்புகள் நிகழ்ந்ததாக ஒரு இலட்சம் ஃபாலோயர்களைக் கொண்ட, வாஷிங்டனைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர் எழுதியிருந்தார். விரிவான பின்னணித் தகவலும் சேர்க்கப்பட்டிருந்தது. சாத் ஹரிரியின் தந்தையும் முன்னாள் பிரதமருமான ரஃபீக் ஹரிரி குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சம்பவம் (2005இல் எனது அலுவலகக் கட்டிடத்தை உலுக்கிய அதே குண்டுவெடிப்பு) தொடர்பான வழக்கில், சர்வதேச தீர்ப்பாயத்தின் தீர்ப்பு இன்னும் சில நாட்களில் வரவிருந்த நிலையில், இந்தக் 'குண்டுவெடிப்புகள்' நிகழ்ந்ததாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்படி நடந்திருக்கும் என்று கணிப்பது இயல்பானதுதான். ஆனால், உடனடியாக எனக்குள் ஒரு சந்தேகம் எழுந்தது. இரண்டு பெருங்கடல்கள், 9,000 கிலோமீற்றர் தொலைவு தாண்டி வசிப்பவரால், இங்கு நடந்தது என்ன என சில நிமிடங்களிலேயே எப்படித் தெரிந்துகொண்டிருக்க முடியும்?

ஆனாலும், எரிச்சல் ஏற்படுத்தும் வகையில் அந்த வாதம் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்பட்டது. பல அமெரிக்கப் பத்திரிகையாளர்களும், அறிஞர்களும்கூட அதை உண்மை என நம்பி எழுதியிருந்தனர். எனினும், அந்த ட்வீட் தவறானது என்பது ஓரிரு நிமிடங்களிலேயே நிரூபணமானது. ஹரிரியின் அரண்மனைக் குடியிருப்பு அருகே குண்டுவெடிப்பு ஏதும் நிகழவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டது. வெடிவிபத்தில் நகரின் ஆயிரக்கணக்கான வீடுகளைபோலவே அவரது வீடும் சேதமடைந்திருந்தது எனத் தெரியவந்தது.

### தவறான வாதங்கள்

அதற்குப் பின்னரும் நடந்தது இதுதான் என சிலர் தங்களுக்குத் தெரிந்ததை வைத்து எழுதுவது நின்றுவிடவில்லை. பெய்ரூட் துறைமுகம்தான் அந்த வெடிவிபத்தின் மையப்பகுதி என்பது உறுதியான பின்னர், மேற்கத்திய செய்தி இணையதளங்களிலும், மேற்கத்திய அரசுகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக்கொண்ட மத்திய கிழக்கு ஊடகங்களிலும் பல்வேறு கட்டுரைகளும், வலைப்பூ பதிவுகளும் எழுதப்பட்டன. பெய்ரூட் பேரழிவுக்குக் காரணம், ஹிஸ்புல்லா (லெபனானிலிருந்து இயங்கிவரும் போராளி இயக்கம்) தான் என்று அவை குற்றஞ்சாட்டியிருந்தன.

**- ஹபீப் பட்டா,**
**நன்றி: அல்-ஜஸீரா**
**(கத்தார் ஊடகம்)**

**தமிழில் சுருக்கமாக:**
**வெ.சந்திரமோகன்**

ஏராளமான வெடிபொருட்கள் நிறைந்த ஆயுதக் கிடங்கை பெய்ரூட் துறைமுகத்தில் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் பொறுப்பற்ற வகையில் பதுக்கி வைத்திருந்ததாகவும், அவற்றை அழிக்க இஸ்ரேல் விமானங்கள் அந்தத் துறைமுகத்தைக் குறிவைத்துத் தாக்கியதாகவும் அந்தக் கட்டுரைகளின் மையக் கருத்து அமைந்திருந்தது.

வெடிவிபத்து நடப்பதற்கு முன்னர் விமானங்களின் சத்தங்களைக் கேட்டதாக பலர் குறிப்பிட்டதை அடிப்படையாக வைத்தே அவை எழுதப்பட்டிருந்தன. ஆனால், அதில் ஒரு முக்கியமான பிரச்சினை இருந்தது. லெபனான் வான் எல்லையில் இஸ்ரேல் விமானங்கள் நுழைவதை லெபனான் இராணுவமும், லெபனானிலுள்ள ஐ.நா. படைகளும் தொடர்ந்து கண்காணித்து, அது தொடர்பான தகவல்களை அவ்வப்போது அளித்துவருகின்றன. ஆனால், வெடிவிபத்து நடந்த நாளில் இஸ்ரேலிய விமானங்கள் லெபனான் வான் எல்லையில் இருந்ததைக் குறிக்கும் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

நகரமே பற்றியெரிந்துகொண்டிருந்தபோது, வீதியெங்கும் உடல்கள் சிதறிக் கிடந்தபோது, அதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஹிஸ்புல்லா இயக்கமே காரணம் என பலரும் குற்றஞ்சாட்டிக்கொண்டிருந்தனர்.

### அரச துறைகளின் மெத்தனம்

ஆனால், இதுவரை கிடைத்திருக்கும் சான்றுகள் மிகச் சிக்கலான கதையையே சொல்கின்றன. ஓகஸ்ட் 4இல் நடந்த வெடிவிபத்தைத் தொடர்ந்து அது தொடர்பான புகைப்படங்கள், ஆவணங்கள், லெபனானின் பல்வேறு அரச நிறுவனங்களுக்கிடையில் நிகழ்ந்த அதிகாரபூர்வத் தகவல் பரிமாற்றங்கள், வெளிநாட்டுக்காரர்கள் - வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வைத்த சாட்சியங்கள் என அனைத்தும் ஒரே விடயத்தைத்தான் சுட்டிக்காட்டுகின்றன. வெடிவிபத்துக்குக் காரணம், ஹிஸ்புல்லா இரகசியமாகப் பதுக்கியிருந்த ஆயுதக் கிடங்கல்ல. அதற்குக் காரணம், 2,750 தொன் அமோனியம் நைட்ரேட். உரம், வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் அந்தப் பொருள் எளிதில் தீப்பிடிக்கக்கூடியது. பருவநிலை மாற்றங்களுக்கேற்ற ஏற்பாடுகள் இல்லாமலும், நிபுணர்களின் கண்காணிப்பு இல்லாமலும் ஆறு ஆண்டுகளுக்கு மேல் அந்தத் துறைமுகத்தில் அது வைக்கப்பட்டிருந்தது.

**(11ஆம் பக்கம் பார்க்க...)**

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# ‘ஈஸ்ரர் தின தாக்குதல் சம்பவங்களை கேள்விப்பட்டவுடன் புலனாய்வுப் பணிப்பாளராக இருந்தமைக்காக வருந்தினேன்’!

## முன்னாள் புலனாய்வுத் துறை பணிப்பாளர் நிலந்த ஆணைக்குழுவில் உருக்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்தினமும் தாக்குதல் நடைபெறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரும் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தாக்குதல் குறித்து தெரிவிக்க முயன்றபோதிலும், அவர் வெளிநாடு சென்றிருந்ததால் தொலைபேசி மூலம் அவரை தொடர்புகொள்ள முடியாமல் போனதாக அரச புலனாய்வுத்துறையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னிலையாகி ஆணைக்குழுவின் அதிகாரிகள் வினவிய கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், தேசிய பாதுகாப்புப் பேரவைக் கூட்டம் இறுதியாக 2019 பெப்ரவரி மாதம் தாக்குதலுக்கு முன்னர் இடம்பெற்றதாக கூறினார்.

தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக தாக்குதலுக்கு முன்னர் சர்வதேச புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்தும் ஏன் அப்போதைய ஜனாதிபதிக்கு அறிவிக்கவில்லை என அரச மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அப்போது நிலந்த ஜயவர்தனவிடம் வினவினார்.

அதற்கு பதிலளித்த அவர், “நான் மாலை 6.18இற்கு பெஜட் வீதியிலிருந்து ஜனாதிபதியை தொடர்புகொள்ளச் செய்யுமாறு சொன்னேன். தொடர்ந்தும் முயற்சிக்குமாறு அவர்கள் என்னிடம் சொன்னார்கள். எவ்வாறாயினும், தாக்குதலுக்கு முன்னைய நாளில் அதாவது, ஏப்ரல் 20ஆம் திகதியும் ஜனாதிபதியை தொடர்புகொள்ள முயற்சித்தும் அது முடியவில்லை'' என நிலந்த ஜயவர்தன சாட்சியமளித்தார்.

நீங்கள் மறுபடியும் முயற்சிக்கவில்லையா என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், நிலந்த ஜயவர்தனவிடம் மீண்டும் வினவினார்.

அதற்கு பதிலளித்த அவர், “இல்லை. இந்தத் தகவலை ஏப்ரல் 4 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அறிவித்திருக்கவேண்டும். ஆனால், நான் அவ்வாறு செய்யவில்லை. பாதுகாப்புச் செயலாளர், தேசிய புலனாய்வுத் துறைத் தலைவர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அறிவிப்பதே எனது கடமை. எனினும், நான் என்னால் முடிந்த அனைத்தையும் செய்தேன். எனக்குக் கிடைத்த அந்தத் தகவலை ஜனாதிபதியிடம் தெரிவிக்க வேண்டும் என்று எங்கும் எழுதப்பட்ட அல்லது வாய்மொழி அறிவுறுத்தல் எதுவும் இல்லை. ஜனாதிபதியிடம் கூறிவிடலாமென நினைத்தேன். நாம் முயற்சித்தபோது அவர் வேலைப்பளுவாக இருந்தார். எனினும், ஜனாதிபதிக்கு அந்தச் செய்தியை சொல்ல வேண்டிய அவசியம் இருந்தது'' - என்றார்.



ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்தால் மக்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள் என்று இப்போது நீங்கள் நினைக்கவில்லையா? என நிலந்த ஜயவர்தனவிடம் ஆணைக்குழுவின் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி வினவினார். நான் இன்னும் அப்படி உணரவில்லை என நிலாந்த ஜயவர்தன பதிலளித்தார்.

நீங்கள் ஜனாதிபதியிடம் கூறியிருந்தால், ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து, இராணுவம் வரவழைக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகளை எடுத்து மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும் என நீங்கள் ஏன் நினைக்கவில்லையா? என மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மறுபடியும் வினவினார்.

அதற்குப் பதிலளித்த நிலந்த ஜயவர்தன, சம்பவத்திற்குப் பின்னர் பலரும் பல விடயங்களை சொல்லமுடியும். நாங்கள் பொறுப்புடன் செயற்பட்டோம். நான் மாத்திரம் ஜனாதிபதிக்கு தெரிவிக்க வேண்டும் என்றில்லை. மாறாக, அதை தேசிய புலனாய்வுத் தலைவர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரால் செய்திருக்க முடியும். அவர்கள் அவ்வாறு செய்திருப்பார்கள் என நான் நினைத்தேன். எனினும், நான் சொல்ல முயற்சித்தேன் - என்றார்.

இதன்போது ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் அவரிடம், தாக்குதல் நடக்கும் என்று நீங்கள் இதற்கு முன்னர் கூறியபோது, பொலிஸ்மா அதிபர் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்று நீங்கள் நினைத்ததாக கூறினீர்கள். அப்போதுகூட நீங்கள் ஏன் ஜனாதிபதியிடம் அதை தெரிவிக்கவில்லை? என வினவினார்.

நான் ஜனாதிபதியுடன் பேசினாலும், அவர் பாதுகாப்புச் செயலாளரிடமோ அல்லது பிரதமரிடமோ அதைக் கூறுவார். அவர் பிரதமருடன் பேசுவாரா என்று எனக்குத் தெரியவில்லை. நான் ஜனாதிபதியிடம் பேசியும் எதுவும் நடக்கவில்லை என்றால் தேசிய புலனாய்வு சேவை எதுவும் செய்யவில்லை என்று அவர் கூறுவார் என அதற்கு பதிலளித்தார் நிலந்த.

ஜனாதிபதி இலங்கையில் இல்லை என்றால், ஏன் அது குறித்து பிரதமரிடமோ அல்லது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தவிடமோ சொல்லவில்லை? என ஜனாதிபதி ஆணைக்குழுவின் நீதிபதி நிலந்த ஜயவர்தனவிடம் மீண்டும் விசாரித்தார்.

அதற்குப் பதிலளித்த அவர், பிரதமருக்கு அறிவிக்கப்படவில்லை. காரணம், இதுபோன்ற விடயங்களில் இதற்கு முன்னர் அவர் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருக்கவிலை என பதிலளித்தார்.

இதன்போது ஏப்ரல் 21 தாக்குதலுக்கு முன்னர் கூடுதல் தகவல் கிடைத்ததா? என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நிலந்த ஜயவர்தனவிடம் கேட்டார்.

காலை 8.27இற்கு எனது தகவல் வழங்குநர்கள் என்னிடம் இதுபற்றி சொன்னார்கள், அவர்களின் இலக்குகளில் ஒன்று கொழும்பு மெதடிஸ்ட் தேவாலயம் என்றும் அவர்கள் அன்று காலை 6 முதல் 10 மணிக்குள் தாக்குதலை நடத்துவார்கள் எனவும் அவர்கள் கூறினார்கள். இந்தத் தகவலுவுடன், காலை 8.28இற்கு நான் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நந்தன முனசிங்கவுக்கும், காலை 8.30இற்கு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கும் அறிவித்தேன். ஆனால், பொலிஸ்மா அதிபர் அதற்குப் பதிலளிக்கவில்லை. அதன்பின்னர் 8.32இற்கு பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு அறிவித்தேன். டீ.ஐ.ஜி. நந்தன முனசிங்கவுடன் பேசியபோது, கொழும்பு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதா என வினவினேன்., அவர் அதை உறுதிப்படுத்தினார். மருதானை, பஞ்சிகாவத்தை, கொச்சிக்கடை பகுதிகளை மேலதிக ஆய்வுசெய்யும்படி நான் கேட்டேன் - என்று நிலந்த ஜயவர்தன கூறினார்.

வெளிநாட்டு புலனாய்வு அதிகாரிகள் நிலந்த ஜயவர்தனவுக்கு தகவல் வழங்கியபோது, அதாவது, 2019 ஏப்ரல் 4 முதல் தாக்குதல் நடத்தப்படும் வரை நடந்த சம்பவங்கள் தொடர்பான தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தால் தாக்குதலை தடுத்திருக்க முடியுமானதாக அமைந்திருக்கும் அல்லவா என அரச மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அவரிடம் வினவினார்.

அவ்வேளையில் ஆணைக்குழு முன் மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலந்த ஜயவர்தன, “அப்படி நடந்திருந்தால் ஒருவரை ஏனும் காப்பாற்றியிருக்க முடியும்'' என்று கூறினார்.

அரச மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் மறுபடியும் “முதல் குண்டு வெடித்ததை அறிந்த பிறகு, அரச புலனாய்வுப் பணிப்பாளராக நீங்கள் என்ன நினைத்தீர்கள்?'' என வினவினார்.

இதற்கு; பதிலளித்த நிலந்த ஜயவர்தன, “நான் அப்போது அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்ததை எண்ணி வருத்தப்பட்டேன். நான் முயற்சித்தும் அது முடியாமல்போனது.

தாக்குதல்களுக்குப் பின்னர் நாங்கள் பிரதமரின் தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தோம். அதன்போது இதுவரை ஆறு குண்டுகள் வெடித்துள்ளன. இன்னும் இரண்டு குண்டுகள் உள்ளன. குண்டுகளை சுமந்த மற்றொரு வான் உள்ளது. எனவே, எங்கும் செல்ல வேண்டாம்'' என அப்போது நான் கூறினேன் எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைமை நீதிபதி, மீண்டும் நிலந்த ஜயவர்தனவிடம், இந்தத் தாக்குதலுக்கு முன்னர் தேசிய பாதுகாப்புப் பேரவை கடைசியாக எப்போது கூடியது என கேட்டார். அதற்குப் பதிலளித்த அவர், 2019 பெப்ரவரி 29ஆம் திகதி எனக் கூறினார். ஆணைக்குழு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.



## பெய்ரூட் வெடிவிபத்து...
## (10ஆம் பக்கத் தொடர்ச்சி...)

2013 செப்டம்பரில், குத்தகைக்கு எடுக்கப்பட்டிருந்த ஒரு ரஷ்ய சரக்குக் கப்பல் அமோனியம் நைட்ரேட்டை ஏற்றிக்கொண்டு, மொஸாம்பிக் நாட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

நிதிப் பிரச்சினை காரணமாகவும், சில தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாகவும் அக்கப்பல் பெய்ரூட்டில் நிறுத்தப்பட்டது. அது திட்டமிடப்படாத ஒரு நிகழ்வு. கட்டணம் செலுத்தப்படாததையும், பாதுகாப்புக் காரணங்களையும் சொல்லி அந்தக் கப்பலை லெபனான் அதிகாரிகள் நிறுத்திவைத்ததையடுத்து, அந்தக் கப்பலின் உரிமையாளர் அதைக் கைவிட்டுவிட்டார். அந்தக் கப்பலில் இருந்த ஆபத்தான சரக்கு இறக்கப்பட்டு, துறைமுகத்தின் ஒரு கொட்டகையில் வைக்கப்பட்டது. பயங்கர வெடிவிபத்து நிகழும் வரை அது கிட்டத்தட்ட சீண்டப்படவேயில்லை.

வெடிவிபத்துக்குப் பிறகு, லெபனான் அரசு நிறுவனங்களுக்கிடையில் நடந்த பல்வேறு தகவல் பரிமாற்றங்கள் குறித்த செய்திகள் லெபனான் ஊடகங்களிலும், சர்வதேச ஊடகங்களிலும் வெளியாகின. வெடிக்கக்கூடிய அந்தப் பொருளை என்ன செய்வது என்று முடிவுசெய்வது தொடர்பாக அதிகாரிகள் நீண்டகாலமாக விவாதித்து வந்ததாகவும், ஆனால், அதை அழிக்க அல்லது விற்பனைசெய்ய பொறுப்பேற்பது யார் என்பது தொடர்பாக ஒரு முடிவுக்கு வர அவர்கள் தவறிவிட்டார்கள் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அமோனியம் நைட்ரேட் எளிதில் தீப்பற்றிக் கொள்ளலாம்; திருட்டுபோக வாய்ப்பு ஏற்படலாம் என்றெல்லாம் கவலைப்பட்ட ஒரு நீதிபதி, அப்பொருள் வைக்கப்பட்டிருந்த கொட்டகையில் இருந்த ஓட்டையை அடைக்க, 2020 ஜூன் மாதம் ஒரு வெல்டிங் குழுவுக்கு உத்தரவிட்டார். அரச பாதுகாப்புத்துறை அறிக்கையை மேற்கோள் காட்டி, இது தொடர்பான செய்தியை ‘ரொய்ட்டர்ஸ்’ நிறுவனம் செய்தி வெளியிட்டிருந்தது.

மேற்பார்வையாளர்கள் இல்லாமல் பணியைத் தொடங்கிய வெல்டிங் குழுவினரின் கவனக்குறைவு காரணமாக அருகில் வெடிபொருட்கள் வைக்கப்பட்டிருந்த சரக்குப் பொதி மீது தீப்பொறிகள் விழுந்திருக்கின்றன. அந்த நெருப்பு அமோனியம் நைட்ரேட்டுக்குப் பரவிய பின்னர்தான், அந்த வெடிவிபத்து நிகழ்ந்தது.

### நிபுணர்களின் விளக்கங்கள்

ரொய்ட்டர்ஸில் வெளியான அந்தச் செய்தி பின்னர் உள்ளூர் ஊடகங்களில் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் மூலம் வெளியான செய்திகளின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.

அரசின் ஆரம்பகட்ட ஆய்வின்படி அந்தச் சம்பவம் தற்செயலாக நிகழ்ந்தது என முடிவுசெய்யப்பட்டதாக ‘வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்’ இதழுக்கு அந்த வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. வெடிவிபத்து ஏற்பட்ட பகுதிக்கு மேலே பரவியிருந்த புகையும், சிதிலங்களும், இருண்ட சிவப்பு நிறத்தில் இருந்தது. அங்கு அமோனியம் நைட்ரேட் இருந்ததை உணர்த்துவதாகவும், அது இராணுவப் பயன்பாட்டுடன் தொடர்புடையதல்ல என்றும் ‘தி நியூயோர்க் ரைம்ஸ்’ இதழுக்குப் பேட்டி அளித்திருந்த அமெரிக்க வெடிபொருள் நிபுணர் டாக்டர் ரேச்சல் லான்ஸ் கூறியிருந்தார். கடந்த நூறாண்டுகளில் தற்செயலாக நிகழ்ந்த 47 முக்கிய வெடிவிபத்துகளைப் போன்றதுதான் பெய்ரூட் வெடிவிபத்தும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஹிஸ்புல்லா இயக்கத்துடன் தொடர்புபடுத்தி முன்வைக்கப்பட்ட வாதங்களை மறுத்த பலரும், இந்த விளக்கங்களை ஏற்றுக்கொண்டார்கள். அதற்குக் காரணம், தகுந்த சான்றுகளின் துணையுடன் இவை முன்வைக்கப்பட்டன என்பது மட்டுமல்ல, அரசின் செயலற்ற தன்மை, திறனின்மை ஆகியவற்றுக்கு லெபனான் பெயர்பெற்றது என்பதும்தான். அதன் விளைவாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் எதிர்பாராத ஆபத்துகள் வெடிக்கக் காத்திருக்கின்றன.

### அன்றாட அபாயங்கள்

ஆபத்தான பொருட்களை முறையாகப் பராமரிக்காததன் விளைவாக, லெபனானில் கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு பேரழிவுகள் நிகழ்ந்திருக்கின்றன - எரிவாயு நிலையங்களிலும், தொழிற்சாலைகளிலும் நிகழ்ந்த 10இற்கும் மேற்பட்ட வெடிவிபத்துகள், தீவிபத்துகள் உட்பட. தவிர, நாடு முழுவதும் வீடுகள், அலுவலகக் கட்டிடங்கள், வணிக வளாகங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் அபாயகரமான பொருட்கள் பாதுகாப்பற்ற வகையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

தனியார் ஜெனரேட்டர்களை இயக்குவதற்காக வணிக நிறுவனங்களாலும், தனிமனிதர்களாலும் இந்தப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஏனெனில், லெபனானின் மின்துறையால், மக்களின் மின் தேவையில் பாதியைத்தான் பூர்த்திசெய்ய முடியும். பிரம்மாண்டமான தனியார் ஜெனரேட்டர்களிலிருந்து வீடுகளுக்கும், வணிக நிறுவனங்களுக்கும் செல்லும் மின்கம்பிகள், சிலந்தி வலைகளைப்போல வீதிகளில் தொங்கிக்கொண்டிருக்கின்றன. இவை மேலும் அபாயத்தை அதிகரிக்கின்றன.

பொதுச் சுகாதாரம் தொடர்பான ஆபத்துகள் அத்துடன் நின்றுவிடவில்லை. தனியார் விருந்துகள், திருமணங்கள் ஏன் சில இராணுவக் கொண்டாட்டங்களின்போதும், தொழில்துறைப் பயன்பாட்டுக்குரிய வெடிபொருட்கள் பரவலாகவும், ஒழுங்குமுறைகளைப் பின்பற்றாமலும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் பல தீ விபத்துகள் ஏற்படுகின்றன.

வீடுகள், வணிக நிறுவனங்களிலிருந்து குப்பைகளைச் சேகரிப்பது உள்ளிட்ட அடிப்படை உள்ளாட்சிப் பணிகளை நிர்வகிப்பதில் அரசின் தோல்விகள், குப்பைகளை எரிக்கும் பரவலான பழக்கத்தை நோக்கி மக்களைத் தள்ளியிருக்கின்றன. தீ விபத்துகளும், காற்று மாசுபாடும் அதிகம் ஏற்பட இதுவும் ஒரு காரணம். அரசின் செயலற்ற தன்மையால் ஏற்படும் ஆபத்துகள் இன்னும் உண்டு. திடக் கழிவுகளும், திரவக் கழிவுகளும் கடலில் நேரடியாகக் கலக்கப்படுவது; உணவுக் கிடங்குகளில் உணவுப்பொருட்கள் அழுகும் சம்பவங்கள்; இறைச்சிக்கூடங்களின் அவலச் சூழல்கள்; வேகக் கட்டுப்பாடு, போக்குவரத்துக் காவலர்கள் என சட்டரீதியான எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் ஆபத்தான சூழலில் இருக்கும் நெடுஞ்சாலைகள், டிராபிக் சிக்னல்கள் இல்லாமல் குறுக்கும் மறுக்குமாகச் செல்லும் வாகனங்கள், பல இடங்களில் தெருவிளக்கு இல்லாதது என அந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

அதனால்தான், ‘பெய்ரூட் வெடிவிபத்து ஹிஸ்புல்லா பதுக்கிவைத்த இரகசிய ஆயுதக் கிடங்கின் மீது இஸ்ரேலிய விமானங்கள் நடத்திய தாக்குதலால் ஏற்படவில்லை; மாறாக, உள்ளூர் அரச நிர்வாகத்தில் தொடர்ந்து நீடிக்கும் இயலாமையின் விளைவாலேயே ஏற்பட்டது’ என்று பலரும் எளிதாக நம்புகிறார்கள்.

### கொந்தளிப்பான வரலாறு

லெபனானைச் சேர்ந்த எந்தவொரு வரலாற்று மாணவருக்கும் அரசின் இந்தச் செயலற்ற தன்மை ஆச்சரியம் தராது. லெபனான் ஒரு நாடு என்பது பெயரளவுக்குத்தான். இங்கு இருப்பதெல்லாம் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் போராளிக் குழுக்கள்தான். காரணம், ஒரு தேசமாக லெபனான் நிறுவப்பட்ட காலத்திலிருந்தே இங்கு உள்நாட்டுப் போர்கள் நடந்துவருகின்றன. லெபனானின் அரசியல் சூழலை விளக்குவதற்கு, 1975-1990 உள்நாட்டுப் போரைப் பின்னணியாக முன்வைக்க பல ஆய்வாளர்கள் முனைகிறார்கள்.

ஆனால், அதற்கு முன்பும் பின்புமான ஆண்டுகளில் உள்நாட்டுத் தரப்புகளும், வெளிநாட்டுத் தரப்புகளும் வான்வழித் தாக்குதல்கள் முதல் படுகொலைகள் வரை பல்வேறு மோதல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படியான நிரந்தரக் குழப்பங்கள், நிலையான அரசு உள்கட்டமைப்புகளையோ, பொருளாதாரத்தையோ கட்டமைக்க காலஅவகாசத்தை வழங்குவதில்லை. திட்டங்களை வகுக்கவோ, அவற்றைச் செயற்படுத்தவோ அதிகாரப் படிநிலையோ, கட்டளைச் சங்கிலியோ இங்கு இல்லை. ஒவ்வொரு தரப்பும் தனது பிராந்தியத்தைத் தனது இஷ்டம்போல் ஆள்கிறது. கூட்டுறவு, கூட்டுப் பணிகள், ஒருங்கிணைந்த தேசியப் பார்வை என எதுவுமே இல்லை.

### படுகளமாகிப்போன தேசம்

அதேசமயம், உள்நாட்டுப் பிற்போக்குத்தனம் மட்டுமே இதற்கெல்லாம் காரணம் என்று சொல்வதில் ஆர்வம் காட்டுபவர்கள், இந்த முடக்கம் உலகளாவிய அரசியலின் நேரடி விளைவும்கூட எனும் உண்மையைக் கவனிக்கத் தவறிவிடுகிறார்கள்.

லெபனானில் செயற்படும் உள்ளூர்க் குழுக்கள், தங்கள் வெளிநாட்டுக் கூட்டாளிகளிடமிருந்து ஆதரவுபெறுகின்றன. ஈரான், சவூதி அரேபியா, அமெரிக்கா, சிரியா, பிரான்ஸ், இஸ்ரேல் போன்ற நாடுகள் லெபனானிலுள்ள பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவளிக்கின்றன, நிதியுதவி வழங்குகின்றன. பல தசாப்தங்களாகத் தொடரும் இந்தப் போக்கின் காரணமாக, பனிப்போர்கள், சதித்திட்டங்கள், மர்மமான வெடிவிபத்துகள் போன்றவற்றின் படுகளமாக லெபனான் மாற்றப்பட்டிருக்கிறது.

நீண்டகாலமாகச் சிதறிக்கிடக்கும் அதிகார மையங்கள், அதன் விளைவாக அரசு நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கும் செயலற்ற தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் அணுகும்போது, லெபனானில் எப்படி எல்லாவிதமான விபத்துகளும் தொடர்ச்சியாக நடக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்காது.

### சர்வதேச உளவு அமைப்புகளின் தோல்வி

பெய்ரூட் ஒரு கொந்தளிப்பான, முடங்கிக்கிடக்கின்ற நகரம் மட்டுமல்ல. உலகில் மிக உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும் நகரங்களில் ஒன்றும்கூட. லெபனானின் உள்நாட்டு விவகாரங்களைக் கண்காணிப்பதில் விரிவாகச் செயலாற்றும் உலகின் உளவு அமைப்புகள், தொன் கணக்கில் வெடிபொருட்கள் ஏற்றிவந்த ஒரு கப்பல், தலைநகரின் முக்கிய துறைமுகத்தில் எந்த அறிவிப்புமின்றி இறக்கிவைத்தபோது எங்கே இருந்தன? இந்த ஆபத்தைக் கணிக்கும் அளவுக்கு உள்ளூர் அதிகாரிகள் திறமையும், துல்லியப் பார்வையும் அற்றவர்களாக இருக்கலாம். ஆனால், ‘டைம் பாம்’ போன்ற இந்த வெடிபொருள் வந்து இறங்கியதை சர்வ வல்லமை பொருந்திய சர்வதேச உளவு அமைப்புகள் எப்படிக் கவனிக்கத் தவறின?

யாருமே இதைக் கவனிக்கவில்லை என்று அத்தனை எளிதாக நம்பமுடியவில்லை. பெய்ரூட் துறைமுகத்துக்கு ஆயுதங்களோ, அவை சம்பந்தப்பட்ட பொருட்களோ வந்தடைவதைத் தடுக்கும் நோக்கில், அமைதியை நிலைநாட்டும் ஐ.நா. கப்பற்படை, 24 மணிநேரமும் லெபனான் கடல் பகுதியில் தொடர்ந்து ரோந்துப் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. 2006இல் நடந்த போரை முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா. பாதுகாப்புச் சபை கொண்டுவந்த தீர்மானத்தின்படி, ஹிஸ்புல்லா இயக்கத்துக்குக் கப்பல்கள் மூலம் ஆயுதங்கள் வருவதைத் தடுக்க இந்த ரோந்துப் பணிகள் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன.

சில மாதங்களுக்கு முன்னர், இந்தத் திட்டத்தின்படி ஒரு இலட்சமாவது கப்பல் வந்துசென்றது கொண்டாடப்பட்டது. லெபனானுக்கு அமோனியம் நைட்ரேட்டைக் கொண்டுசேர்த்த கப்பல், அந்த ஒரு இலட்சம் கப்பல்களில் ஒன்று இல்லையா? 2016இலேயே, பெய்ரூட் துறைமுகத்தில் இருந்த அமோனியம் நைட்ரேட் குறித்து அமெரிக்க ஒப்பந்ததாரர் ஒருவர் எச்சரிக்கை விடுத்தது குறித்து ‘தி நியூயோர்க் ரைம்ஸ்’ குறிப்பிட்டிருந்ததே? அவருடைய எச்சரிக்கை ஏன் கவனத்தில் கொள்ளப்படவில்லை?

### உண்மையான காரணம் கண்டறியப்பட வேண்டும்

லெபனானில் இதற்கு முன்னர் ஆயிரக்கணக்கில் நடந்திருக்கும் குண்டுவெடிப்புகள், தாக்குதல்கள் தொடர்பான தகவல்கள் இன்னமும் மர்மத்திலேயே மூழ்கடிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவற்றைப் பற்றி ஒவ்வொரு தரப்பும் தங்களுக்குச் சாதகமாக தங்கள் அரசியல் இலாபங்களைப் பெருக்கிக்கொள்ளும் வகையில் விளக்கமளிக்கும் போக்கு தொடரும் நிலையில், இந்த வெடிவிபத்து அவற்றிலிருந்து எந்தவகையில் வேறுபட்டது என்பதைப் புரிந்துகொள்வது சாத்தியமற்றது.

சதித்திட்டத்தால் நிகழ்ந்தது என்று சொல்லப்படுவதை ஏற்பதும், அரசின் செயலற்ற தன்மையாலும், திறனின்மையாலும் விளைந்த விபத்து என்று சொல்லப்படுவதை ஏற்பதும் எளிது. ஆனால், எளிமையான, சந்தர்ப்பவாத விளக்கங்களால் நாம் திருப்தியடைந்துவிடக்கூடாது.

இந்தத் துயரச் சம்பவத்துக்கு முன்னதான ஆறு வருட காலகட்டத்தில், யாராவது ஒருவர், எந்தக் கணத்திலாவது எதையாவது செய்திருக்க வேண்டும்.

இதுபோன்ற பேரழிவுகள் எதிர்காலத்தில் நிகழ்வதைத் தடுக்க நாம் உண்மையாகவே விரும்பினால், இவ்விடயத்தில் செயலாற்றுவதிலிருந்து பலரைத் தடுத்தது எது என்பதைக் கண்டறிவது மிக அவசியம்!



# ஐரோப்பா காற்பந்து லீக் தொடரில் செவில்லா கழகம் சம்பியனாகியது

ஐரோப்பிய காற்பந்து சங்க ஒன்றியத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் ஐரோப்பா லீக் காற்பந்து தொடரில் செவில்லா கழகம் சம்பியன் பட்டம் வென்று ஐரோப்பா லீக் காற்பந்து வரலாற்றில் ஆறாவது தடவையாக சம்பியன் பட்டத்தை தனதாக்கியது. அதன்படி 2006, 2007, 2014, 2015, 2016ஆம் மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் செவில்லா கழகம் சம்பியன் பட்டம் வென்றது.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பியனை தீர்மானிப்பதற்கான இறுதிப் போட்டியில், செவில்லா - இன்டர் மிலன் கழகங்கள் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பாக ஆரம்பமான இப்போட்டியில், 5ஆவது நிமிடத்தில் இன்டர் மிலன் சார்பாக நட்சத்திர வீரர் ரொமேலு லூக்காக்குவுக்கு பெனால்டி வாய்ப்பொன்று கிடைத்தது. இதனை சரியாக பயன்படுத்திய லூக்காக்கு அதனை கோலாக மாற்றினார். தொடர்ந்து போட்டியின் 12ஆவது நிமிடத்தில், செவில்லா அணியின் லுக் டி ஜோங் அணிக்காக முதலாவது கோலை அடித்தார். பின்னர் போட்டியின் 33ஆவது நிமிடத்தில் இன்னுமொரு கோல் அடித்தார்.

இதனையடுத்து, போட்டியின் 35ஆவது நிமிடத்தில் இன்டர் மிலன் சார்பாக டியாகோ கோடின் கோலடிக்க முதல் பாதி 2-2 என்ற கோல்கள் கணக்கில் சமநிலை பெற்றது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் சம்பியன் யார் என்பது மீதான எதிர்பார்ப்பு எகிறியது.

இந்தத் தருணத்தில் இன்டர் மிலனின் அனுபமிக்க நட்சத்திர வீரரான ரொமேலு லூக்காக்கு, போட்டியின் 74ஆவது நிமிடத்தில் செவில்லா வீரர் 'பைசிக்கள் கிக்' முறையில் அடிக்கப்பட்ட கோலை தடுக்க முயன்றபோது அது ஓன் கோலாக மாறியது. இந்த அதிர்ஷ்டத்துடன் போட்டியின் இறுதியில் 3-2 என்ற கோல்கள் கணக்கில் செவில்லா கழகம் ஆறாவது முறையாக சம்பியன் கிண்ணத்துக்கு முத்தமிட்டது.

# இரட்டை சதம் விளாசி சாதனை படைத்த ஷக் க்ரௌலி



பாகிஸ்தான் அணியுடனான இறுதி டெஸ்ட் போட்டியின்போது இங்கிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸில் இரட்டை சதம் விளாசிய துடுப்பாட்ட வீரர் ஷக் க்ரௌலி இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளார்.

சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இருதரப்புத் தொடரின் முதல் தொடரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் தற்சமயம் நடைபெற்றுவருகிறது. முதல் இரண்டு போட்டிகளும் நிறைவுபெற்ற நிலையில், முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியானது மழை காரணமாக குறைந்த ஓவர்கள் வீசப்பட்ட நிலையில், வெற்றி தோல்வியின்றி நிறைவுபெற்றது. இந்நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொண்டது. அதன்படி இங்கிலாந்து அணி ஷக் க்ரௌலி மற்றும் விக்கெட் காப்பாளர் ஜொஸ் பட்லர் ஆகியோரின் 359 ஓட்ட இணைப்பாட்டத்துடன் 8 விக்கெட்டுகளை இழந்து 583 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதில் மூன்றாம் இலக்க துடுப்பாட்ட வீரர் ஷக் க்ரௌலி 393 பந்துகளுக்கு முகங்கொடுத்து ஒரு சிக்ஸர், 34 பௌண்டரிகளுடன் கன்னி இரட்டை சதம் கடந்து மொத்தமாக 267 ஓட்டங்களை குவித்தார். மறுமுனையில் ஜொஸ் பட்லர் 152 ஓட்டங்களை குவித்தார். இதில் 22 வயதுடைய இளம் துடுப்பாட்ட வீரர் ஷக் க்ரௌலி இவ்வாறு இரட்டை சதம் விளாசியதன் மூலம் இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இரட்டை சதம் விளாசிய மூன்றாவது இளம் வீரர் என்ற சாதனையை படைத்தார்.

# "உங்கள் கால்கள் மிகவும் நீளமாக இருக்கின்றன. நீங்கள் என்னுடைய இருக்கையில் உட்காருங்கள்"

## – டோனியின் வியக்கத்தக்க செயல்



13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரானது செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறுகிறது. இந்நிலையில், தொடரில் பங்கேற்பதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் கடந்த வெள்ளிக்கிழமை சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் டுபாய் சென்றடைந்தனர்.

விமான பயணத்தின்போது, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் எம்.எஸ்.டோனி கடைப்பிடித்த எளிமை அவரது இரசிகர்களை வியப்படையச் செய்துள்ளது. அதாவது, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் நிர்வாகி ஜோர்ஜ் என்பவருக்காக டோனி தனது உயர்ந்த 'பிஸ்னஸ் கிளாஸ்' இருக்கையை விட்டுக்கொடுத்துள்ளார். விமானத்தில் நடைபெற்ற சுவாரஸ்யமான சம்பவம் குறித்து ஜோர்ஜ் டுவிட்டரில் பகிர்ந்துள்ளார்.

அதில், "கிரிக்கெட்டில் எல்லா சாதனையும் படைத்த ஒருவர் என்னிடம் வந்து, உங்கள் கால்கள் மிகவும் நீளமாக இருக்கின்றன. நீங்கள் என்னுடைய 'பிஸ்னஸ் கிளாஸ்' இருக்கையில் உட்காருங்கள். நான் 'எகொனமி கிளாஸில்' உட்காருகிறேன்'' என தெரிவித்ததாக டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

எந்த நேரத்திலும் வித்தியாசமான பாணியில் செயற்படும் டோனியின் இந்த எளிமையான செயல் கிரிக்கெட் இரசிகர்களின் மனதைக் கவர்ந்துள்ளது. இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# கெலிஓயா விளையாட்டுக் கழகம் ஒழுங்குசெய்துள்ள 'கிரிக்கெட் ப்ளாஸ்டர் 2020'

(கண்டி)

கெலிஓயா விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்துள்ள 'கிரிக்கெட் ப்ளாஸ்டர் 2020' கண்டி மாவட்ட கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மடவளை ஓல்ட் மதீனியன்ஸ் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது

கண்டி பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலை மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாம் அரை இறுதிப் போட்டியில் கண்டி லிவர்பூல் விளையாட்டுக் கழகத்தை 7 விக்கட்டுகளால் வெற்றிகொண்டே ஓல்ட் மதீனியன்ஸ் விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.



மேற்படி 40 ஓவர்கள் கொண்ட போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி ரிவர்பூல் கழகம் 29.2 ஓவர் முடிவில் சகல விக்கட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜனித் 28 பந்துகளில் 21 ஓட்டத்தையும், கே. பாண்டியன் 24 பந்துகளில் 15 ஓட்டங்களையும், மனோ 36 பந்துகளில் 14 ஓட்டங்களையும் பெற்றனர். அஹ்மட் ரஸூர் 8 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கட்டுகளையும் இன்சாப் பைசல் 5 ஓவர் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.



பதிலுக்கு ஆடிய ஓல்ட் மதீனியன்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கட்டுகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கான 102 ஓட்டங்களைப் பெற்றது. மொகமட் ரிபாஸ் 78 பந்துகளில் ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களைப் பெற்றார். முன்சிப் இம்தியாஸ் 17 பந்துகளில் 15 ஓட்டங்களைப் பெற்றார். எனவே, மேற்படி வெற்றி மூலம் மடவல ஓல்ட் மதீனியன்ஸ் அணி எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதி இடம்பெறவுள்ள இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

ஏற்கனவே கம்பளை விக்கிரமபாகு கல்லூரி மைதானத்தில் நடந்துமுடிந்த முதலாவது அறை இறுதிப் போட்டியில் கம்பளை ஓல்ட் சஹிரியன்ஸ் அணி கண்டி தண்டர்ஸ் அணியை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மொத்தம் 12 அணிகள் பங்கு கொண்ட இச்சுற்றுப் போட்டி லீக் அடிப்படையில் நடந்து பின்னர் நொக்கவுட் முறையில் இறுதிப் போட்டி வரை இடம்பெற்று வருகின்றது.






# "எடுடா வண்டிய, போடுடா விசில்"

## – தமிழில் உற்சாகப்படுத்திய தாஹிர்

2020ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரிமியர் லீக் தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அது தொடர்பான செய்திகள் விறுவிறுப்பை ஏற்படுத்தியுள்ளன. அந்தவகையில் தென்னாபிரிக்க அணியின் அனுபவ சுழற்பந்துவீச்சாளர் இம்ரான் தாஹிரின் டுவீட் இரசிகர்களிடத்தில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

"என் இனிய தமிழ் மக்களே, பாக்கத்தானே போறீங்க.. இந்தக் காளியோட ஆட்டத்த..'' என இம்ரான் தாஹிர் தமிழில் டுவீட் செய்துள்ளார். இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் எம்.எஸ்.டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடும் தென்னாபிரிக்க அணியின் சுழற்பந்துவீச்சாளர் இம்ரான் தாஹிர், தற்போது மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்றுவரும் கரீபியன் பிரிமியர் லீக் தொடரில் விளையாடிவருகிறார்.




இந்நிலையில், இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் பங்கேற்பதற்காக அணித்தலைவர் எம்.எஸ்.டோனி, ரவீந்திர ஜடேஜா, சுரேஸ் ரெய்னா உள்ளிட்ட சென்னை அணி வீரர்கள் ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கிச் சென்ற புகைப்படங்கள், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உத்தியோகபூர்வ டுவிட்டரில் வெளியாகின.

குறித்த டுவீட்டை ரீ-டுவிட் செய்த இம்ரான் தாஹிர் அதில் இவ்வாறு தமிழ் மொழியில் குறிப்பிட்டுள்ளார். "என் இனிய தமிழ் மக்களே, உங்கள் நலம், நலமறிய ஆவல். பல முறை வந்தோம், வென்றோம், சென்றோம். இம்முறை வருகிறோம், வெல்வோம், செல்வோம் உங்கள் நல்லாசிகளோடு. பாக்கத்தானே போறீங்க இந்தக் காளியோட ஆட்டத்த. எடுடா வண்டிய, போடுடா விசில்.'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான தமிழகத்தைச் சேர்ந்த விஜய் சங்கருக்கு, வைஷாலி விஸ்வேஸ்வரன் என்ற பெண்ணுடன் அண்மையில் திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. குறித்த நிச்சயதார்த்த புகைப்படத்தை விஜய் சங்கர் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்தார்.**



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7